[illegible]

V3 · No. 15 10 April 1930

உ


3L
[illegible]24, N28KN
N30·3·15
189099

149

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஞு ஏப்ரல் மீ 10உ [No. 15.

28 MAY 193

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 281 |
| 2. | அப்பர் (யுத்தக்கலை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 283 |
| 3. | தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன்தூது) | 286 |
| 4. | மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 287 |
| 5. | நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—3 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. | 289 |
| 6. | ஆச்சரிய சூடாமணி (அசோகவன அங்கம்) R. முத்தையர் | 290 |
| 7. | குறுந்தொகை (பாட்டு, 12—21) K. இராமரத்நம் ஐயர் B. A. | 291 |
| 8. | இலஞ்சிப் பாவை (காதலியம்பல்) T. S. நடராஜபிள்ளை B A., B.L. | 294 |
| 9 | கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. | 295 |
| 10. | வர்த்தமானம் | 299 |


## கலாநிலயம்

189099

### இருபக்கம் எதற்கு முளது.

ஒவ்வொன்றிற்கும் இவ்வுலகில் எதிரொன்றுளது.

தற்கால நாகரிகத்தின் நலங்களை மிகப் பாராட்டுவார் பெரும்பாலார். இவர்,எந்திரங்களின் உதவியால் யாம் என்னென்ன எய்தப்பெற்றோம் என வியந்து மகிழ்கின்றனர். இன்னவர்களில் ஒருவர், புரிந்ததோர் சொற்பொழிவில், "கோவிலென்றுங் கடவுளென்றுங் கும்பிட்டுப்பாழாவீர், தெருவில் ஓடும் மோட்டார்க் கார்களைக் கண்டவுடன் கைதொழுது உய்யுங்கள். மனிதனது மதியின்பெருமையை இத்தகைய எந்திரங்களினமைப்பிலும், தந்தியுமில்லாமல் ஆயிரம்ஆயிரம் மைல்களுக்கப்பால் பேசக்கூடிய சூழ்ச்சியிலும் காண்கின்றோம். உலகத்தை உய்விக்க வந்ததொரு மாநுடச்சாதனங்கள் இவை. இன்னவைகளில் முயலாமல் கண்காணுக் கடவுளைப்பற்றிக்கிடந்ததாலன்றோ நம் தேயம் இந்நிலைமைக்கு வந்தது" என்று பரிவுடன் பல பேசினர். இவ் வுரையாளர் பொதுஜனங்களைச் சேர்ந்தவர். வாய்வந்தன பேசுமளவு தமிழ்ப்பழக்கமும், தனக்கு ஆங்கிலமும் தெரியும் என்று பிறர் எண்ணிக்கொள்ளும்பொருட்டுக் கைவிட்டகலாத வொருஆங்கில தினசரிப் பத்திரிகையும் உடையவர். இவரன்றி,ஜனங்களுக்குத் தலைவரென்ற நிலைமையுடையவரும், ஆங்கிலம்கற்றவரும் உயர்பதவியி லிருப்பவருமாகிய வொருவர், ஆகாயக் கப்பல் முதலிய சாதனங்களால் போக்குவரவின் விரைவு மிகமிக, தேசத்திற்குத் தேசம் நட்பும் உறவும் மிகுந்து எல்லாரும் இனிச் சகோதரர்களே ஆகிவிடப்போகின்றனர் எனத் தாம் நம்புவதாகக்கூறினர். ஒருதாய் வயிற்றிற் பிறந்து ஓரேவீட்டில் வளர்கின்றவர்களது நட்பும் உறவும் நடக்குமாறு கண்டிருந்தும் இவ்வண்ணம் இவர் இயம்பியதுகேட்டு வியப்பதல்லாமல் எம்மனோர் என்செய் வியதும், இஃதிவ்வாறாக, இதற்கெதிர் எண்ணுவாரும் சிலர் உளர். விரைவுடைய எந்திரங்களை விரும்பச்செய்கின்ற தற்கால நாகரிகத்தின்மனப்பான்மையையும் வாழ்க்கைத்தத்துவத்தையும் உணர்ந்த நுண்மையால் பேசிய கார்லைல், டென்னிஸன் போன்ற ஆங்கில்ப்புலவர்கள் ஒருபுறமிருக்க, இன்றைக்கு மேனாடுகளில் ஒருசிலர், எந்திரமும் வர்த்தகமும் வழக்கும் சூழ்ந்துழக்கும் இக்கால வாழ்க்கைக்கு வெருவியோடி, "வேண்டா, வேண்டா, இக்கோலமொன்றும் எமக்குவேண்டா. செயற்கைச் சாதனங்களால் நாங்கள் சிதைந்ததெல்லாம்போதும்" என நகரங்களைவிட்டு . நெடிதகன்று, தற்கால ஊட்டாட்டங்க ளண்டாதபடி தனியிடங்களமைத்துக்கொண்டு, இங்கிலாந்து, ஆஸ்டிரியா, கனடா, பிரான்ஸ் போன்ற தேசங்களில், இயற்கையோடிணங்கிய வாழ்க்கையுட்புக முயலலாகின்றனர் என்பதைப் பத்திரிகைகளின் வாயிலாக அறிகின்றோம். உணவுப்பொருளும், அதனைச் சமைப்பதற்கு மண்பாத்திரம் ஒன்றிரண்டும், மழைவெயில் காக்கவோர் கூரையு மன்றி வேறோர் உடைமையும் வாழ்க்கைச் சாதனங்களும் இவர்களுக்கு இல்லையாம். நாணம் என்ற பெயரால் நடப்பதெல்லாம் இயற்கைக்கு

மாறான பொய்யென்று உறுதிகூறி உடையெனவொன்று அணிவதையும் வெறுத்துவிட்டுத் தாம் தாய்வயிற்றினின்று வெளிவந்தநாள் இருந்தமேனியில் எந்நாளும் இருப்பதே தக்கதெனுங் கொள்கையில் ஆணும் பெண்ணும் உலவிவரத் துணிகின்றனர். மோட்டார் வண்டியின் காலில்விழுந்து கும்பிடச் சொல்வது ஒரு கோடி—இந்த நிர்வாணக்கோலம் மறு கோடி.

இத்தகைய முரண்நிலையைக் கல்விமுறையிலும் காணலாம். ஒருநாட்டினது வளர்ச்சி, பாடசாலைகளின்பெருக்கத்திலும் கல்வியின் பொருட்டு அரசாங்கத்தார் செலவுசெய்யும் பொருளினளவிலும், அதற்காகச் செல்வவந்தர் செய்யும் முயற்சியிலும் அடங்கியிருக்கின்றதென்று எல்லோரும் ஒருவாயாய் இயம்புகின்றனர். பள்ளிக்கூடங்கள் திறக்கத்திறக்கச் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றனவென்பது சீனதேசத்துப் பழமொழிகளி லொன்று. பள்ளிக்கூடங்கள் வைப்பதுமல்லாமல் அதனில் எல்லாப் பிள்ளைகளுஞ் சென்று படிக்கும்படி அரசாங்கத்தார் வற்புறுத்தவேண்டிய அவசியமும்பாராட்டப்படுகின்றது. இதுவுமன்றி, இந்தியப் பள்ளிக்கூடங்களையும் இங்கிலாந்துப் பள்ளிக்கூடங்களையும், இவ்விரு தேயங்களில் நடக்கின்ற முறைகளையும், ஒப்புநோக்கி 'என்னே நம்நிலை' என ஏங்காதார் எங்கும் இலர். இன்னுஞ் சிலர், "கொழிக்கின்ற செல்வமுடையார், பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் கணக்கிலநிறுவிப் பெரும்பயனளிக்காமல், கோவிலினுந் தேரினுங் கொட்டி அழிக்கின்றனரே" எனப் பழிப்பாருமுளர். எனினும், இவ்விதம் பள்ளிக்கூடங்களைப் பாராட்டுகின்றவர்களுக்கு எதிராகக் கூவுகின்ற குரல்களும் கேளாமற் போகவில்லை. பிள்ளைகளைக் கூட்டங்கூட்டங்களாக அடைத்துவைத்துக் கல்வியென்றபெயரால் அவர்களது இயற்கையைச் சிதைப்பதற்கே உரிய இம்முறைகளால் தீதன்றி நன்மை விளையாதென்னுங் கொள்கையுங் கருதத்தக்கது. நூற்றைம்பது வருடங்களுக்குமுன் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்த வித்தகர் ரோஸ்ஸோ என்பவர் கல்வியைப்பற்றி எழுதியுள்ள வோர் அரியநூலில், கற்பிக்கவேண்டியதையெல்லாம் தந்தையேயேனும் அல்லது அவன்போன்ற அன்புடைய பெருங்குணமேன்மையோனேனும், ஒருபிள்ளைக்குத் தனியாக அவனோடு உண்டு உறங்கிப் பழகிப் போதித்தலல்லாது மற்றமுறைகளெல்லாம் வீணென்று மானதசாத்திரத்தாலும் தர்க்கநெறிவழுவாமலும் காட்டிவைத்தார். இவ்வாறன்றிப் பொதுப்பாடசாலைக்குச் சென்றவொருபிள்ளை, ஈரமில்லாநெஞ்சமும் தீமையேயுள்ள வொழுக்கமும் பெற்றுப் பொய்வாழ்க்கை வாழ்வதற்கே மீள்வானென அவர் சாதித்தார். இவ்வாசகம் இன்றைக்குப் பொய்யாய்முடிந்ததோ மெய்யாய் நிகழ்கின்றதோ என்பதை நாம் இயம்பவேண்டா. இந்த ரொஸ்ஸோ என்றவர் பழையகாலத்தவர் என்ற பான்மைபால் அவருக்கு முகங்கொடோம் என்று மறுத்தல் மரபன்று. அவர் காலத்திற்குப்பின் கல்விமுறையில் எத்தனையோ சீர்திருத்தங்கள் சேர்ந்திருக்கின்றனவென்று சிலர் எண்ணலாம். இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்பர்ட், கேம்பரிட்ஜ் முதலிய சர்வகலாசாலைகளிற் பெறுகின்ற பயிற்சியைப் போற்றவேண்டாவோ, என்பர் எண்ணிறந்தோர். இப்படி இங்கிருந்தெல்லோரும் அங்காந்து பார்க்கும்படி புகழ்வாய்ந்த, "ஆக்ஸ்பர்ட், கேம்பிரிட்ஜ் பாடசாலைகளையெல்லாம் இடித்துத் தகர்த்து அஸ்திவாரத்தையும் வேருடன் கல்லியெறிந்தாலன்றி இங்கிலாந்துதேயம் நன்னெறிகண்டுய்யும்வகை வேறில்லை" என்று சில நாட்களுக்குமுன் பர்நார்ட் ஷா என்பவர் விளம்பினர். இவரிங்கிலாந்து தேயத்தவர். கல்வியிலும் அறிவிலும் உலகமக்களில் இற்றைநாள் முதல்வகுப்பில் நிற்பவர். மாநுட இயற்கையையும் வாழ்க்கைப்போக்கையுஞ் சரித்திரச் செலவையும் உற்று நோக்கிநோக்கி முதிர்ந்த வயது எண்பதுங் கடந்தவர். உன்னிய உறுதியை ஒருவருக்கு மஞ்சாது எடுத்துரைக்கும் வீரரென்பதும் இவ்வாசகத்தினாலேயே தெரிகின்றது. இன்னொருவர் இயம்பிய சொல் இகழ்தற்பாலதோ!

இவ்விதமே எதிரெதிர் நடக்குங் கொள்கைகள்எத்தனையோபல. அவையனைத்தையும் எடுத்து வரைவதென்றால் இவ்விதழ்களெல்லாம் போதா. எனினும், எல்லாவற்றிற்கும் எதிர்முகம் ஒன்று உளதென்பதை மறப்பார் பலரிலராயினும், அதனை மறக்காது நினைவுபடுத்திக்கொள்ள இங்குக்காட்டிய இவ்விரண்டு உதாரணங்கள் உதவும். இதனை மறத்தலாகா அவசியத்திற்கோ அளவில்லை. ஆனால், பெரும்பகுதியோர் இதனை மறந்து ஒருவர்பின் ஒருவராய் மாநுட நன்மைக்கென்று சொன்னதையே சொல்லிக்கொண்டு செய்ததையே செய்துகொண்டு வருகின்றனர். இவர் சொல்லும் வழியிற் சென்றால் தீமையே அடைவோம், என்று எதிருரைப்பார் மொழிகளை ஆராயவேண்டாவோ. இவருரையிலேதான் வாய்மையும் இருக்கவேண்டுமென்பதையும் இக்காலத்துக் கொடுமையுங் காட்டிக் கொடுக்கின்றதே. பண்டைய இந்தியர் தம் மக்களுக்குப் போதித்தமுறை ரோஸ்ஸோ வகுத்துரைத்த முறையாகும். அக்காலம் அனைவரும் வாழ்வாங்கு வாழ்ந்தனர் என்பதனிற் பெரிதும் ஐயமில்லை. இனி, பர்னார்ட் ஷாவுடன் இருப்புப் பாறையை எடுத்துக்கொள்ள வேண்டா மென்பவர் தக்க காரணங்கூறக் கடமைப்பட்டிருக்கின்றன ரல்லரோ!

இதுகொண்டு, கல்வியினால் விளைந்தது கேடெனஎவரும் இயம்புகின்றாரலர். கல்வியென்ற பெயரால் அதுவல்லாததை விளம்பரஞ்செய்து விற்கின்ற இவ்வர்த்தகத்தின் கொடுமையையே இது குறிக்கின்றது. இப்பாடசாலைகளிற் கற்பிக்கின்றபாடங்களிற் பெரும்பகுதி உண்மைக் கல்வியைக் கொல்வதற்கே ஏற்றனவாயிருக்கின்றன. எனினும், இவைகளுக்கிடையே ஒன்றிரண்டு உயர்ந்த நூல்கள் கையாளப்பெறலாம். ஆயினும் அவைகளும் கடலிற்கரைத்த காயமெனமணமின்றிக்கழிவது வியப்பாமோ. இவைகளைப் போதிப்பவர் யார்-கற்பவர் யார்-எந்த நோக்கத்தோடு போதிப்பவரும் கற்பவரும் அந்நூல்களைக் கையில் எடுக்கின்றனர்—என்னுமிவைபன்ன தன்மைகளை நினைவிற்கொள்ளுங்கால் நமது கல்விச்சாலைகளின் உண்மையான உருவம் புலப்படும் நாமகள் வதியும் நற்கோயிலாவதுபோய் இவை கல்விக் கடைகளே ஆகின்றன. இவ்விதம் இவை கடைகளாய்விட்டது பாடசாலைகளை நடத்துவார் பிழையே என்று கூறுவதும் பொருந்தாது. 'கிளப்பிற்கும்,' குதிரைப்பந்தயத்திற்கும், வர்த்தமானப் பத்திரிகைக்கும் 'எலக்ஷன்களுக்கும்' உத்தியோகத்திற்கும் இடையே நான்கு நாளைக்கொருதரங்கூடத் தன்மகனோடு நின்று பேச நேரமில்லாத் தந்தைமார்களது இரக்கமின்மையெல்லாந்திரண்டு பள்ளிக் கூடங்களாய்ப் பெருகுகின்றன. மேலும், இக்கால வாழ்க்கையில் வயிற்றிற்கு வழி அப்பள்ளிக்கூடங்களின் வாயில்களே.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

### 7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

264வது பக்கத் தொடர்ச்சி.

இதுகாறும் அகப்பொருளிற் றிகழும் நாடகமும் அதைச்சார்ந்த கலைகளையும் கூடியவாறு வாகீசர் திருவாக்கால் நோக்கினோ மன்றே. இனி, புறப்பொருட் கலையாய சங்கிராம விலக்கணமென்னும் யுத்தக் கலையையும், அதைச் சார்ந்த போர் வீரருக்கு இன்றியமையாத கலைகளான அஸ்திரப் பரிக்ஷை, இரதப் பரிக்ஷை, கஜப்பரிக்ஷை, அசுவப் பரிக்ஷை மல்யுத்த முதலியகலைகளைத் தேவாரவாயிலாய்க் காணக்கூடிய பாகங்கள் எவையேனும் கட்புலனாயின், அவற்றைக்கண் டனுபவித்துப் பின்னர் ஏனைய கலைகளுக்குச் செல்வோம்.

(i) சைவர் புறங்காட்டா வீரர்.

அறுபத்துமூவரில் பலர் போர்வீரரெனப் பெரியபுராணத்தாலும், மூவர் திருவாக்காலு முணர்கிறோம்.

கூடா மன்னரைக் கூட்டத்தில் வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழல் சிங்கடி யப்பன்
றிருவா ரூர னுரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் றொண்டீர்
பாடநும் பாவம் பற்றறுமே. சுந்தரர்.

இவ்வாறு, வெளிப்படையில் சுத்த வீரரெனக் காணப்பட்டவர் நீக்கலாக, ஏனையோரும் எதிரிக்குப் பயப்படுவாரலர். திருநாவுக்கரசு மொழிந்ததுபோல்

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதன்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மானேல் சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்
உம்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 5—9

எனக் கூற வல்லவர்களே. ஏனெனில் இவர்கள் தேகத்தில் சற்றும்பற்றின்றி இறைவனைப் பற்றினவர்.

இதன்றியும் சைவசமயம் தழைக்க ஆரம்பித்த காலத்தில் தென்னிந்தியாவில் எக்குலத்திற் பிறந்தோராயினும் ஒரு சமயத்தில் போர்த்தொழில் வகிக்க வேண்டியநிலைமை நேருமென்பது அக்காலத்தில் யாவரும் அறிந்ததே. இதன் காரணம் உள்நாட்டில் சைனமதம், புத்தமதமென்னு மிரண்டு மதங்கள் உலவுவதும், வடுகர் முதலானோர் அப்போதைக்கப்போது படையெடுத்து வருதலுமாம். இதனால் சிவனடியார்களும் தம் கையில் வில்லும் அம்பும் தம்மைக் * காத்துக் கொள்ளும் நிமித்தம் வைத்திருப்பது அக்காலத்திய வழக்கமாகும். அடியார் அவ்வாறு போர்வீரர்களாயிராவிடில் திருநாவுக்கரசுநாயனாரைப் பிடித்துவரும்படி உத்தரவுசெய்த பல்லவன், மந்திரிமாருடன்† பெரும்படை யனுப்பவேண்டிய அவசியமில்லை

(ii) சைவர் வழிபடும் கடவுளும் போர் வீரரே: ‡
(பாதாதிகேச வர்ணனை)

திருநாவுக்கரசுநாயனார் தனது இறைவனைப் போர் வீரனாய் $ உருவகப்படுத்திப் புகழும் பாசுரங்கள் தேவாரத்தில் எங்கும் காணலாகும். சிவபெருமான் ஏறும் வாகனம் மலைபோன்ற எருது. அவரும் ஒரு பெரிய வில்லாளி:—

வெள்ளிக்குன் றன்ன விடையான் றன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் றன்னைப்
புள்ளிவரி நாகம் பூண்டான் றன்னைப்
பொன்பிதிர்ந் தன்ன சடையான் றன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் றன்னை
வாரா வுலகருள வல்லான் றன்னை

* காப்பதோர் வில்லு மம்புங் கையுடை யிறைச்சிப் பாரத்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க் கலச மாட்டத்
தீப்பெருங் கண்கள் செய்யக் குருதிநீ ரொழுகத்தன்கண்
கோப்பது பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.
திருக்குறுக்கை - திருநேரிசை 7.

† (i) அரசனது பணிதலைநின் றமைச்சர்களு மந்நிலையே
முரசதிருந் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினார் பாற்சென்றார்.

(ii) சென்றணைந்தவமைச்சருடன் சேனைவீரருஞ்சூழ்ந்து
மின்றயங்கு புரிவேணி வேதியனா ரடியவரை
யின்றுநுமையரசனழைக்கெமைவிடுத்தான் போதுமென
நின்றவரை நேர்நோக்கி நிறைதவத்தோ ருரைசெய்வார்
திருநாவுக்கரசு நாயனார் புராணம்(பெரியபுராணம்) 91 & 92

‡ வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணா மலையனை
யூர னையுண ரார்புர மூன்றெய்த
வார னையடி யேன்மறந் துய்வனோ.
திருஅண்ணாமலை திருக்குறுந்தொகை 7.

$ தந்தவத்தன் றன்றலையைத் தாங்கி னான்காண்,
சாரணன்காண் சார்ந்தார்க்கின் னமுதா னான்காண்
கெந்தகத்தான் காண்கெடில வீரட் டன்காண்,
கேடிலிகாண் கெடுப்பார்மற் றில்லான் றான்காண்
வெந்தொத்த நீறுமெய் பூசி னான்காண்,
வீரன்காண் வியன்கயிலை மேவி னான்காண்
வந்தொத்த நெடுமாற்கு மறிவொ ணான்காண்;
மாகடல்சூழ் கோகரண மன்னி னானே.
திருக்கோகரணம் திருத்தாண்டகம் 2.

யெள் கவிடு பிச்சை யேற்பான் றன்னை
யேழையே னன்பண் டிகழ்ந்த வாறே

ஏழைத்திருத்தாண்டகம் 2.

இப்போர்வீரர் கண்களோ காயுமாயின் உலகனைத்தும் கற்பொடியாம். அதற்கு உதாரணம் காமனைக் காய்ந்த கண் இவருக்கு நெற்றியில் விளங்கும்:—

வாரேறு வனமுலையாள் பாக மாக
மழுவாள் கையேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூ ழோத வேலித்
திருவாஞ் சியத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடனஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.

உலகத்தைப் பாழாக்கத் திருப்பாற்கடலினின்று எழுந்த காளவிஷத்தின் கொடுமையை விழுங்கிக் கண்டத்திலடக்கியவர் இவர். மழுவாட்படையர், பூதப் படையினர். இவர் எத்தகைய பகையு மொழிப்பவர். இவர் காயின் அவை திரிபுரம்போல் நீறும்,

ஒழித்திடுமே யுள்குவா ருள்ளத் துள்ள
வுறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
விழித்திடுமே காமனையும் பொடியாய் வீழ
வெள்ளப் புனற்கங்கை செஞ்ச டைமே
லிழித்திடுமே யேழுலகும் தானு கும்மே
யியங்குந் திரிபுரங்க ளோரம்பினு
லழித்திடுமே யாதிமா தவத்து ளானே
யவனுகி லதிகைவீ ரட்ட னுமே.

திருவதிகைவீரட்டானம்-அடையாளத் திருத்தாண்டகம் 6.

செவ்விய சடையின்மேல் * பகீரதன் வரவழைத்த வெள்ளக் கங்கையை யேற்று உலகத்திலிழித்த பீடுடைய செல்வர், பிறையைச் சடையிற் சூடியவர்.

மாலாகி† மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனி னுரிவை கொண்டு
மேலாலுங் கீழாலுந் தோன்று வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே,
கோலாலம் படவரைநட் டரவு சுற்றிக்
குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலால முண்டிருந்த கண்டத் தானை
யவனுகி லதிகைவீ ரட்ட னுமே.

திருஅதிகை வீரட்டானம்-அடையாளத் திருத்தாண்டகம் 8

இவர் தானவரை அழிப்போர், வானவருக்கு எக்காலத்திலும் நண்பர் என்னலாகாது. அல்வழிச் செலலும் இந்திரன், பிரமன், உபேந்திரன் முதலானோரையும் தண்டிப்பது முண்டு:—

சிரமேற்ற நான்முகன்றன் றலையு மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
யுரமேற்ற விரவிபற் றகர்த்துச் சோம
னொளிர்கலைகள் படவுழக்கி யுயிரை நல்கி
நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே மறைநான்கு மோல மிட்டு
வரமேற்கு மழபாடி வயிரத் தூணே !
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே.

திருமழபாடி-திருத்தாண்டகம். 5

இவர் தண்ணிழலாய் அடியார்க் கிருப்பினும், வெந்தீ யேந்துங் கையர். அரவமணிந்து புலித்தோலுடை தரித்தவர்:—

மெய்யானைப் பொய்யரொடும் விரவா தானை
வெள்ளிடையைத் தண்ணிழலை வெந்தீ யேந்துங்
கையனைக் காமனுடல் வேவக் காய்ந்த
கண்ணுனைக் கண்மூன் றுடையான் றன்னைப்
பையா டரவமதி யுடனே வைத்த
சடையானைப்பாய்புலித்தோ லுடையான்றன்னை
யையானை யாவடுதண் டுறையுண் மேய
வானடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே

திரு ஆவடுதுறை - திருத்தாண்டகம். 8.

போரில் வல்ல *இம் முக்கண்ணினர் எண்டோளினர்; மான் மழுக் கையினர்:—

குறைவி லோங்கொடு மானிட வாழ்க்கையாற்
கறைநி லாவிய கண்டனெண் டோளினன்
மறைவ லான்மயி லாடுது றையுறை
யிறைவ னீள்கழ லேத்தி யிருக்கிலே.

திருமயிலாடு துறை - திருக்குறுந்தொகை. 5.

மைஞ்ஞவில் கண்டன் றன்னை
வலங்கையின் மழுவொன் றேந்திக்
கைஞ்ஞவின் மானி னோடுங்
கனலெரி யாடி னானைப்
பிஞ்ஞகன் றன்னை யந்தண்
பெருவேளூர் பேணி னானைப்
பொய்ஞ்ஞெக நினைய மாட்டாப்
பொறியிலா வறிவி லேனே.

திருப்பெருவேளூர் - திருநேரிசை 4.

இவர் அரையில் ஆர்த்தது பாம்பு; அணிவது கொன்றைமாலை. அவர் காதில்தோடு, கையில் சூலம்; பூசுவது சுடலைச் சாம்பல். இத்தகைய பாசுபத வேடம், கையில் பிரமன் தலையுடனும் கங்கணத்துடனும் திகழும்:—

படவரவ மொன்றுகொண் டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞீலி மேவி னானை
யடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
யமுதாக வுண்டானை யாதி யானை

* ஊனிகந்தூ ணுறிகையர் குண்டர் பொல்லா
வூத்தைவாய்ச் சமணருறவாக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ள வயிரத்தை நண்ணு
நாயேனைப் பொருளாக வாண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

திருமழபாடி-திருத்தாண்டகம் 4.

† வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனுர்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த வடிகளே.

திருப்பைஞ்ஞீலி . திருக்குறுந்தொகை 5.

* பாரிடங்க ளுடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை யயில்வாய சூல மேந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் றன்னை
நின்மலனை யம்மலர்கொண் டயனு மாலும்
பாரிடந்து மேலுயர்ந்துங் காணு வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்க ளேத்தும்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னானே

திருவெறும்பியூர் - திருத்தாண்டகம் 5.



மடலரவ மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் றன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோட திட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பூசிச்
சுந்தரனுச் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

திருநள்ளாறு, திருத்தாண்டகம் 3 & 4.

இவ்வீரன் முடியிலிருப்பது சூளாமணி; வெள்ளை நீறணிந்த சோதியுருவம் அவன் பவள மேனியாகும்:

சூளா மணிசேர் முடியான் றன்னைச்
சுண்ணவெண் ணீறணிந்த சோதி யானைக்
கோள்வா யரவ மசைத்தான் றன்னைக்
கொல்புலித்தோ லாடைக் குழகன் றன்னை
நாள்வாயும் பத்தர் மனத்து ளானை
நம்பனை நக்கனை முக்க ணானை
ஆள்வானை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே

திருஆரூர் - திருத்தாண்டகம் 7.

கவள மால்களிற் றின்னுரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையொர் பங்கினர்
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே.

திருப்பாலைத்துறை—திருக்குறுந்தொகை 2.

இவர் மார்பிலணியும் தலைமாலையும், பூந்தாமரையன்னமேனியும் வெண்ணீறும், கையில் தருணிச்சமும் யாவருக்கும் தஞ்சமென்னும் அடையாளமாம்:-

வீந்தார் தலைகல னேந்தியென்
விண்ணப்ப மேலிலங்கு
சாந்தாய வெந்த தவளவெண்
ணீறுந் தருணிச்சமும்
பூந்தாமரை மேனிப் புள்ளியுழை
மானதள் புலித்தோ
ருந்தா மிருக்குஞ் சரக்கறையோ
வென்றனி நெஞ்சமே.

சரக்கறைத் திருவிருத்தம் 3.

இவர்*உருவமோ,

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளியரை யாறரே.

திருவையாறு—திருக்குறுந்தொகை 5.

இவருடைய வீரகண்டாமணியணிந்த திருப்பாதங்கள்* பாதாளத்திற் கப்புறமும் தோண்டிச்சென்ற திருமாலுக்கும் காணப்படவில்லை யெனினும், அவற்றை நினையா தகங்காரத்துடன் மார்க்கண்டேயரை உயிர் வௌவ வந்த யமனுக்கு, அவனுக்குத்தந்த உதையால் காணப்பட்டனவாம்:—

மேலு மறிந்தில னான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே.

தனித் திருவிருத்தம் 11

பவளத்தடவரை போன்ற திண்டோள்களையுடைய இப்பரமன் பாதாதிகேச பரியந்தம் எடுத்துக்காட்டக் கூடியன யாவும் ¶போற்றுந் தகையனவாய் வீரச் சுவை கலந்திருக்கும். இவற்றைத் தொகுத்தே அப்பர்,

அயனொடு மாலிந்திரன் சந்திராதித்த ரமரரெல்லாஞ்
சயசய வென்றமுப் போதும் பணிவன தண்கடல்சூழ்
வியனில முற்றுக்கும் விண்ணுக்குநாகர் வியனகர்க்கும்
இயம்பர மாவன வின்னம்ப ரான்ற னிணையடியே.

திருவின்னம்பர் - திருவிருத்தம்

எனப் பாடினர் போலும். இவற்றை யாவும் நோக்குழி சிவபெருமான் பராக்கிரமம் செப்புதற் கரிதன்றோ?

இடிப்பான்கா ணென்வினையை யேகம் பன்காண்
எலும்பா பரணன்கா ணெல்லா முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயி னான்காண்
முறைமுறையா லைம்பொறியும் வழுவா வண்ணம்
படித்தான் றலையறுத்த பாசு பதன்காண்
பராய்த்துறையான் பழனம்பைஞ்ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே.

திருக்காளத்தி - திருத்தாண்டகம் 2

* மங்குன் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிசைவைப்பர் பால்போ னீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டான்வர்
சரிதை பலவுடையர் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவ ரென்னு ளீங்கா
ரிடைமருது மேவிய வீச னாரே.

திருவிடைமருது - திருத்தாண்டகம் 2.

* ஞாலத்தை யுண்டதிரு மாலு மற்றை
நான்முகனு மறியாத நெறியான் கையில்
சூலத்தா லந்தகனைச் சூருளக் கோத்துத்
தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல் செய்த
வந்தணனைக் கைக்கொண்ட செவ்வான் வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம். 9.

¶ செற்றவர் முப்புரமன் றட்ட சிலைத்தொழிலார்
சேவக முந்நினைவார் பாவக முந்நெறியும்
குற்றமி றன்னடியார் கூறு மிசைப்பரிசுங்
கோசிக மும்மரையிற் கோவண மும்மதளும்
மற்றிகழ் திண்புயமும் மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கையுமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழ வென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே !

சுந்தரர்

189099

# தமிழ்ப் பாடம் 117.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[ 267-வது பக்கத் தொடர்ச்சி. ]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

எதிர்கொண்டவர்களுடன் ஏகிய கண்ணன், துரியோதனனது மாளிகைக்குச் செல்லாமல், விதுரனது மாளிகைக்குள் சென்று யாவரையும் விடைதந்து அனுப்பிவிட்டு, ஆங்கோர் சிம்மாதனத்தில் வீற்றிருக்க லாயினன். இவ்விஷய மடங்கிய இரு செய்யுள்கள் விடலாயின. பிறகு

இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமாருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன். 41

திருமால், தன்னகம் எய்தினனென விதுரன் மகிழ்ச்சியுற்ற தன்மையினை இதுவும், இதன்பின் வரும் நான்கு செய்யுளும் குறிக்கின்றன.

பதவுரை.

வந்தனை-தனக்கு வழிபாடு செய்த, அமரருக்கு-தேவர்களுக்கு; மருந்து - அமிர்தத்தை, அருளிய - கடைந்து எடுத்து அருளின, மாயோன் - திருமால், விருந்து - தன் மனைக்கு விருந்தாக, வந்தனன் - வருவதற்குத் திருவுளம் கொண்டனனே, என்று - என்று, உளம் உருகிய - மனம் உருகிய, விதுரன் - விதுரனவன்,

உவந்து இருந்துஅருள் - உவகையோடு இருந்து அருளிய, இறைவனை - எம்பெருமானை, இறைஞ்சினன் - வணங்கினன். இறைஞ்சி - வணங்கியவுடன், பெரும் - பெரும், துவம்தனை - இரண்டென்னும் தன்மையவாய, பிறப்பையும் இறப்பையும் - பிறப்பு இறப்பு என்பனவற்றை, பிரித்தான் - நீக்கிவிட்டான்.

குறிப்பு:— இருந்துவந், பெருந்துவந், மருந்துவந், விருந்துவந் என நான்கடிகளிலும் முதல்எழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் சில ஒன்றேயாகத் தொடர்ந்து வருவதால் இது திரிபு என்னும் சொல் அணி(வால்யூம்.2, 511பக்கம்).துவம்என்பது இரண்டு என்று பொருள்படும் த்வம் என்னும் வடமொழியின் சிதைவு.

---

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனதக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதார் விதுரனிப் பிறப்பையுந் தொலைத்
[தான்
வீடு கண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா. 42

பதவுரை.

அலர்ந்த - மலர்ந்த, கோகனதம் - தாமரையின், காடு - காட்டினை, கண்டு என - (வண்டு) கண்டது போல; தோடு- இதழ்களை, கொண்ட - கொண்டிருக்கின்ற, தார் - மாலையை அணிந்திருக்கிற, விதுரன் - விதுரனவன், கோடு - சங்கினை, கொண்ட - ஏந்திய, கை - கையையுடைய, குரிசிலை - கண்ணபிரானை, கண்டு - பார்த்து, தன் - தன்னுடைய, கண் இணை - இரண்டு கண்களும், களியா - களிப்படைந்து, இப்பிறப்பையும் - இந்தப் பிறவியையும், தொலைத்தான் - ஒழித்துவிட்டான்.

வீடு கண்டவர்க்கு - முக்திநிலை கண்டவர்க்கு, இயம்பவும் - (இவ்வாறெல்லாம் நிகழ்வதை) சொல்லவும்; வேண்டுமோ - வேண்டுமோ, வேண்டா - வேண்டுவதில்லை.

குறிப்பு:—கோடுகொண்ட, காடுகண்ட, தோடுகொண்ட, வீடுகண்ட—இவை இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்,ஆதலால் வருமொழி முதல் வல்லினம் மிகவில்லை. கைக்குரிசில் (கையை உடைய குரிசில்) இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை யாதலால் ஐகாரத்துடன் கூடிய ஓரெழுத் தொருமொழியான, கை என்னும் நிலைமொழிக்குப் பின் வருமொழிமுதல் வல்லினம் மிகுந்தது. கோகனதக் காடுபோல் கண்ணனைக் கண்டனன் என்பது, அவன் திருமேனியில் கண்கள் அதரம் கரதலம் நாபி பாதம் ஆயவை தாமரைமலர்போன்று அலர்ந்திருப்பதைக் கருதியாம். 'கரியமால்வரை முளரிக்காடு ஈன்றுகிடந்தாங்கு' என்று திருவரங்கக் கலம்பகத்தில்(2வது வால்யூம் 907-பக்கம்) வந்திருப்பதை நினைவிற்கொள்ளவும்.

---

உள்ளி னுணர்ந் துள்ளமு முருகின னெழுந்து
துள்ளி னன்விழுந் திணையடி சூடினன் றுயரைத்
தள்ளி னன்மலர்த் தடக்கையாற் றத்துவ வமுதை
யள்ளி னனெனக் கண்களா லருந்தின னளியோன் 43

பதவுரை.

அளியோன் - அருளுக்குப் பாத்திரமான விதுரன், உள்ளினன் - திருமாலை என் மனையில் எய்தப்பெற்றேனே என்று சிந்தித்தான்; உணர்ந்தான் - உணர்ந்தான்; உள்ளமும் உருகினன் -உள்ளமும் உருகினன்; எழுந்து துள்ளினன் - எழுந்து குதித்தான்; விழுந்து - விழுந்து, இணையடி - இரண்டு பாதங்களையும், சூடினன் - சிரசிலே சூடிக்கொண்டான்; துயரை - துன்பங்களை யெல்லாம், தள்ளினன் - தள்ளிவிட்டான்; மலர் - தாமரை மலர்போன்ற, தடம் - பெரிய, கையால் - கைகளால், தத்துவ அமுதை - தத்துவமாகிய அமிர்தத்தை, அள்ளினன் என - அள்ளினன் போல், கண்களால்-தன் இருகண்களாலும், அருந்தினன் - பருகினன்.

குறிப்பு:—அடிசூடினன், இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வலி மிகவில்லை.

---

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவம் செய்ததிச் சிறுகுடி லென்றான் 44

தன்மனை வந்த கண்ணனுக்கு முகமுன் கூறுகின்றான் விதுரன்.

பதவுரை.

கருதி - நினைவோடு, நீ - திருமாலாகியநீ, எய்தற்கு வந்து தங்குவதற்கு ஏற்றதாய், என்ன - என்ன, மா-



7 MAY 1930

பெரிய, தவம்-தவத்தை, இச்சிறுகுடில்-இந்த எனது சிறிய வீடானது, செய்தது - செய்துவிட்டது, (ஒன்றுமில்லையே, ஆதலால்)

முன்னமே - முன்னே, துயின்று அருளிய - நித்திரை செய்தருளிய, முது - பழமையான, பயஸ் உததியோ-பாற்கடல் என்று மயங்கினையோ,(அல்லது) பன்னக அதிபன் பாயலோ - பற்களுடைய பாம்புகளுக்குத்தலைவனாகிய ஆதிசேஷனும் படுக்கை என்று மயங்கினையோ, பச்சை - பச்சையாகிய, ஆல் இலையோ - ஆல இலையென்று மயங்கினையோ, (அல்லது) சொன்ன - புகழ்ந்து சொல்லப்படுகின்ற, நால் வகை - நான்குவகையான, சுருதியோ - வேதமென்று எண்ணி மயங்கினையோ, (அறிகிலேனே) என்றான் - என்று துதித்தான்.

விரிவுரை:—தமிழ் இலக்கியத்தில் பொருள்வளமும், சொல்நயமும் தலைசிறந்து விளங்குகின்ற செய்யுள்களில் இது ஒன்று. வில்லியும், அவ்விதுரனோடு தத்துவஅமுதை அள்ளி அருந்தினாலன்றி, இத்தகை முகமன்ஒன்று அவர் உள்ளத்தில் உதித்திராது. தன் மனைக்கே, கண்ணன் வந்தானெனத் தழைத்த மனத்தினால் நெகிழ்ந்துருகிப் பாய்ந்த சொற்கள் இவை. " அண்ணலே, என் மனைக்கு வரவேண்டும் என்ற நினைவோடு 'கருதியே நீ எய்தினாய்' என நான் எண்ணுவது எங்ஙனம். அன்னதற்கு இக்குடில் அரும்தவம் மிகப் புரிந்திருத்தல் வேண்டும். மற்று, செய் தவந்தான் எத்தனையே யாயினும், நீ வந்தருள அவை போதுமோ. ஆதலால் நீ ஏதோ ஒருவாறு மயங்கியே இங்கு வந்திருத்தல் வேண்டும். தூங்கினன் ஒருவன் சிறிது கண்விழித்துப் பாயலை விட்டு அகன்றுசென்று மீண்டும் வந்து துயிலப் புகுங்கால் அத் தூக்கமயக்கத்தினால் முன் துயின்ற பாயல் ஈதென்று ஓராமல் வேறு ஓர் படுக்கையில், தனதென்றே நினைத்துப் படுக்கப் புகுவதேபோல் பாற்கடலினும், ஆதிசேடனினும், ஆலிலையினும், அருமறை நான்கினும் துயின்றுஇருந்தநீ சிறிது எழுந்து ஏதோ கருமங்கருதி இவ்வுலகில் வந்து என் மனையை அவைகளில் ஒன்றென மயங்கிப் புகுந்தனை போலும். தவம் ஏதேனும் என் குடில் செய்தது உண்டாயின் அது மயக்கத்தால் நீ வருதற்குப் பற்றினும் பற்றலாகுமே யன்றி, விதுரன் மனையிது இதன்கண் யான் எழுந்தருளல்வேண்டும், எனக்கருதி நீ வருதற்கோ பற்றாது காண்" என்னும் பொருளால் இச் செய்யுள் சிறக்கின்றது. இப்பொருள் கூறுங்கால் முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ, முதலியன மயக்கஅணியின்பாற்படும் (மயக்க அணியினது இலக்கணத்தை இரண்டாவது வால்யூம் 572-வது பக்கத்திலும், முதல் வால்யூம் 547-வது பக்கத்திலும் காணலாம்)

---

மும்மை யாகிய புவனங்கண் முழுதையு மருந்து
மெம்மை யாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தா
னம்ம வென்றன னறுநூ றுயிர மடையர்
தம்மைநோக்கின னவர்களும்விரைவுடன் சமைத்தார். 45

பதவுரை.

மும்மை ஆகிய - (மேல் கீழ் நடு என்னும்) மூன்று வகையாகிய, புவனங்கள் - உலகங்கள், முழுதையும்-எல்லாவற்றையும், அருந்தும் - (பிரளய காலத்தில்) உண்டருளியவனும்; எம்மை - நம்மனோரை, ஆள் உடைய - அடிமையாகக் கொண்டிருக்கின்ற, நாயகன்- தலைவனும் ஆன திருமால், விருந்தினுக்கு - (என்) மனையில் விருந்துண்ண, இசைந்தனன் - உடன்பட்டான் அம்ம - அப்பப்பா, (யான் என்செய்வேன்) என்றனன் - என்று தனக்குள் சொல்லிக்கொண்டவனாய் விதுரன், ஆறுநூறு ஆயிரம் - ஆறுலக்ஷம், மடையர்தம்மை - சமையற்காரரை, நோக்கினன் - பார்த்தான். அவர்களும்-அச் சமையற்காரர்களும்(அக்குறிப்பைத் தெரிந்துகொண்டு,) விரைவுடன் - வேகமாக, சமைத்தார் - சமைத்தனர்.

விரிவுரை:—"வாராவிருந்தாகிய இவன் பாரும்நீரும் முன் பசித்தான்போல் உண்டவனல்லனோ. இக்குவலயமே அவனுக்குப்பற்றவும்போதவில்லையே. யானவனுக்கு எங்ஙனம் விருந்தியற்றிக் கரைகாணப் போகின்றேன்" என விந்தையும் கவலையும் கலந்த மனத்தினனாய் விதுரன்மகிழ்வுற்ற நிலையை 'அம்ம' என்னும் இடைச்சொல் குறிக்கின்றது.

---

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[268-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour)

பாலிகளைப்பற்றி ஆராய்கின்றோமாதலின் அவற்றிற்கு அப்பெயரைக் கொடுத்ததோர் இயற்கைச் செயனிலையை முதலில் நோக்குவோம். பாலூட்டி வளர்த்தல், குழவியைப் பேணுதலே அன்றோ ? பேணுதல் என்பதால் சீராட்டிப் பாராட்டி வளர்த்தலும்இடையூறு வாராமற் காத்தலும் குறிக்கப்படுகின்றன. பாலிகளைப் பொறுத்தஅளவில் இவ்வியற்கைச் செயலுக்கேற்ற உடலமைப்பு ஒன்று உள்ளமையை நாமறிவோம். பால் என்ற உமிழ்நீரைக் கசியும் பாற்கழலைகள் பெண்களிடம் காணக்கிடக்கின்றன அன்றோ? கழலை கடுப்பெடுத்துப் பால்சுரத்தலைத் தாயன்பின் அறிகுறி என உலகம் போற்றவில்லையா ? இவ்வாறு பால் சுரக்கும்போது ஒரு வகையான மெய்ப்பாடு எழுகின்றது. "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனேன்" என ஆளுடைய அடிகள் பாடுவது இம்மெய்ப்பாட்டையே யாகும். வாத்ஸல்யம் என்று இம் மெய்ப்பாட்டிற்கு வடநூலோர் பெயர் வைத்துள்ளார்கள். அன்பு, அருள், என்ற சொற்கள் இம்மனநிலையைக் குறிக்க வழங்கப்படுகின்றன. அவை பொதுவாக மனநெகிழ்ச்சியைக் குறிக்கவும் வழங்கப்படுகின்றன. ஆதலின் தாயன்பினை

சிறப்பாகக் குறிக்கத் "தாய்மை" என்ற சொல்லை வழங்குவோம். ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் விழைந்து நிற்கும் இணைவிழைச்சிக்கேற்ற மெய்ப்பாட்டைக் 'காதல்' என வழங்குவோம். தாய்மைஎன்பது காதல் என்பதினும் வேறு. "ஒருத்தி தன் குழவியையும் அணைக்கின்றாள்; தன் கணவனையும் அணைக்கின்றாள். இரண்டிடத்துப் ஊற்றின்பமே புலனாகின்றது. ஆதலின் இரண்டும் ஒன்றே" என மன்றாடுவார் பலர். ஆனால் உலகில்,காதல் அரும்பாத கன்மனப்பெண்டிர்பலர் குழவிமுகம் நோக்கி நீராய்உருகவில்லையா?

நமது மூக்கடிக்கு அருகே மூளையின்கீழே கடலைப் பருப்பளவுள்ள கழலையொன்று மங்கலான மஞ்சள் நிறத்தோடு ஓர் சிறிய எலும்புச்சிமிழ்க்குள் விளங்குகிறது. அக்கழலை உண்மையில் இரண்டு கழலைகளாகும். மூக்கடி முன்கழலை (AnteriorPituitary or Pre pituitary), மூக்கடி பின் கழலை (Posterior Pituitary or Post Pituitary) என அவற்றை வழங்குவோம். மூக்கடிப் பின்கழலையிலிருந்து கண்ணாடிபோன்ற ஒரு சாறு கசிந்து முதுகுநரம்பு நீரில் (spinal fluid) விழுகிறது.இம்மூக்கடிப் பின்கழலையிலிருந்து உண்மையில் இரண்டு சாறுகள் கசிகின்றன. ஒன்று குருதி ஓட்டத்தையும் சிறுநீர்ப் பெருக்கத்தையும் மிகுதிப்படுத்துவதோடு பால் கசிவதையும் பெருக்குகின்றது. மற்றொரு சாறு கருப்பையையும் சிறுநீர்ப் பையையும் குவிந்துகுவிந்து இயங்கச் செய்கின்றது. இவ்வாறு கருப்பை குவிவதால்தான் குழவி வெளியே தள்ளப்படுகிறது. எனவே, இவ்வாறு பிள்ளைப்பேற்றிலும், குழவியைப் பேணலிலும் துணைசெய்யும் இக்கழலை ஒருவகையில் தாய்மை என்ற மெய்ப்பாட்டிற்கே முதல் எனலாம்.

குழவியே இந்தச் செயனிலையை இயக்குகின்றது. குழவியின் அவலக்குரலே இதனைத் தூண்டுகின்றது. குழவி, தாயின்கண்ணுக்கு மாம்பழம் போல உயிரில்லாப் பொருளாகத் தோன்றவில்லை. குழவியின் நடத்தையை அவள் உணர்கின்றாள்.நடத்தையைஉணராத போது இஃது எழுவதில்லை. தாயன்பாம் தாய்மையும், மகனன்பாம் மகன்மையும் ஒன்றுக்கொன்று இயைபுடையனவாகவே விளங்குகின்றன ஒன்றுக்கொன்று இசைந்த பொருத்தம் உலகம்போற்றும் ஓர் இயற்கைப் பொருத்தமாகும். தாய்க்குப் பால் கடுப்பெடுத்தபோது பாற்கழலையைக்கண்டுகுழவிவாய் வைத்துக் குடிக்கின்றது. தாய் "வாளாகிட" என்றால், குழவியும் வாளா கிடக்கின்றது. மகவு அழுதால் தாய் பரிந்தோடுகின்றாள். இச்செயல்கள் மக்களிடமட்டுமா காணக்கிடக்கின்றன. பசுவினையன்றோ இத்தாய்மைக்கு எடுத்துக்காட்டாக நம் புலவர்பெருமக்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். மற்றைய விலங்குகளினிடத்தும் பறவைகளிடத்தும் இத் தாய்மையின் நெகிழ்ச்சியை நாம் கண்கூடாகக் காணவில்லையா.

இச்செயல்கள் வெறும் மடக்கல்ல. இடத்திற்கும் தகுந்தபடியன்றோ மாறிமாறி வருகின்றன. ஒரு முறை தாய் குழவியைக் கட்டியணைப்பாள்;மறுமுறை பால் கொடுப்பாள்; வேறொரு முறை தூக்கிச் செல்வாள். காத்தலே இச்செயனிலையின் பயனாதலின் அவலக்குரல் கேட்டு அக்குழவியை அணைத்தலே இயற்கைச் செயனிலையாக விளங்குகின்றது. குருவிகள் தம் குஞ்சுகளை இறக்கைக்குள் அணைத்துக்கொள்வதனையும் விலங்குகள், தம் குட்டிகளை மார்புறத் தழுவிக் கொள்வதனையும் காண்க. அவலக்குரல் இடையுறவெழுந்த அச்சநிலையில் தோன்றுவதாதலின் உடனே ஓடிவரும் தாய் குழவிக்கு உயிரிருக்கின்றதோ என்று முகர்ந்து பார்த்தலும், அச்சக்குளிர் விட்டுப்போவதற்கு நாக்கால் நக்கிச் சூடுண்டாக்குதலும் இயற்கைச் செயலாய் எழுவதும் இயல்பே. குழவியின் மணத்தைத் தாயறிவாள். நாவால் நக்குதல் மக்களிடை முத்தமாக மாறிவிட்டது. கட்டியணைத்துத் தலைமுகட்டையும் உடலையும் முகர்ந்து நாவால் நக்கி மகிழ்தலோ, முத்தமிட்டுக் களித்தலோ இச்செயற்கைச் செயனிலையில் காணப்படுகின்றன. முகர்ச்சி இன்பமும் ஊற்றின்பமும் பெருகுவதும் பாற்கழலை கடுப்பெடுத்து வீங்குவதும் இத்தாய்மை என்னும் மெய்ப்பாட்டில் கலப்புற்று விளங்குகின்றன. ஒரு தாய் தன் குழவிக்குப் பால்கொடுத்துப் பாராட்டுவதைக்கண்ட மற்றொருத்தி அத்தாயின் அகநிலையை அறியக்கூடுமன்றோ? அவ்வாறே ஒருவிலங்கு தன்குட்டிக்குப் பால்கொடுத்து அதனை நாவால்நக்கிப் பாராட்டுமானால், அங்கும் தாய்மை திகழ்கின்றது எனத் துணிந்துகூறலாம் அன்றோ? உள் நுகர்ச்சியும் புறநடத்தையும் ஒன்றாய் இயைந்து விளங்குதலின் இரண்டையும் அறிந்தால்தான் நம் ஆராய்ச்சி பயனுடைய தாகும்.

இத்தாய்மை தாய்க்கே யுரியதாயினும் தந்தையினிடத்தும் காணப்படுகின்றது. தந்தையும் குழவியைக் காப்பில் கண்ணும் கருத்துமாக ஒத்துழைக்கும் போது குடும்பம் பிறக்கின்றது. குருவிகளிடையும் சில விலங்குகளிடையும் இதனைக் காணலாம். அவ்வாறு ஒத்துழையாதபோது பெண்டாட்டி என்றும் அகமுடையான் என்றும் ஏற்பாடு ஒன்றும் இல்லை. அந்நிலையில் ஆண் விலங்கு கண்டகண்ட பெண்விலங்குகளோடு களிக்கின்றது. தாயின் சிறப்பியல்பே இத்தாய்மை; ஆதலின் ஆண்களிடம் அத்துணைப் பேரொளியொடு ஒளிர்வதில்லை. அதுபற்றியே சிலர் தாய்மை என்பதே இல்லை எனக் கூறுகின்றனர். அதனிருப்பிற்குக் குழவியை அணைத்து மகிழ்ந்த தந்தையின் மனமே சான்று. குழவியின் செயலைக் காண்பதற்குமுன்னர் அவற்றைக் கொன்றுவிடும் காட்டுமிராண்டிகளும் அவற்றின் செயலையும் முறுவலையும் அவலக்குரலையும் கண்டு கேட்ட பின்னர்க் கொல்வதில்லை மகனைப்பிரிந்து மன்னுயிர் நீத்த தயரதன் கதையை அறியாதார் யார்? இனித் தாய்க்குரிய இம் மெய்ப்பாடு தந்தையினிடம் எவ்வாறு வந்தது? இயற்கை மலர்ச்சிமுறையில் ஆணிடத்தே காணக் கிடக்கும் உடலமைப்புச் சிறுகச்சிறுகப் பெண்ணிடத்தும் வளரத் தொடங்குகின்றது. மானினிடத்தும் ஆட்டினிடத்தும் காணக்கிடக்கும்கொம்புகள் முதன் முதலில் சண்டையிடும் ஆண்களிடந்தான் தோன்றியிருத்தல்வேண்டும். பின்னர்ப் பயனைநோக்கிப் பெண்களிடமும் பரவியது. அஃதேபோலத் தாயிடை எழுந்த இச் செயற்கைச்செயனிலை, பயனை நோக்கி ஆணினிடையும் பரவியது எனல் வேண்டும்.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[229-வது பக்கத் தொடர்ச்சி]

முதல்பத்து மூன்றாம் பதிகம்.

முதல் பாசுரம்.

பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்புமநம் அரும்பெறலடிகள்
மத்துறுகடை வெண்ணெய் களவினில் உரவிடை
[யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந் தேங்கிய எளிவே

பதவிளக்கம். பத்து - பக்தி. வித்தகன் - ஆச்சர்ய பூதன். மலர்மகள் - தாமரைமேல் உள்ள லக்ஷ்மி. அடிகள்-ஸ்வாமி. மத்துறுகடை - மத்தால் அழுத்திக் கடைந்தெடுத்த. ஆப்புண்டு - கட்டுண்டு. ஏங்கிய - பயத்தால் ஒன்றும் செய்ய வொண்ணாதபடி நடுங்கிய இளிவு - பிறர் இரங்கும்படி தாழ்வது. ஸௌலப்ய குண சூசகம்.

(இதன் பொருளை நாம் முன் இவ்வாண்டு பிப்ரவரி மீ 6வது இதழ்க் கலாநிலயம் 114 பக்கத்தில்விளக்கியுள்ளோம். அதை இங்குப் பார்த்துக்கொள்ளவும்.)

குறிப்புகள்:—சென்ற பதிகத்தில் பக்தியோகம் தொடங்கியிருக்க, இப்பத்தில் அதன்தொடர்ச்சியாய் அதன் கவடுகளையோ ஏனைய அதற்குச் சம்பந்தமான தத்துவங்களையோ நற்போதனைகளையோ அருளிச் செய்வார் என்று எதிர்பார்க்க நியாயமுண்டு. அங்ஙனமின்றிப் பகவானுடைய ஸௌலப்பிய குணத்தை இப்பத்தில் விஸ்தரிக்க என்ன சந்தர்ப்பம் என்ற சங்கை உதிக்கக்கூடும். சமாதானம், பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆன்மதரிசன போகத்துக்கு அவசியமான இந்தரியஜயம் வந்தால்தான் அந்தத் தரிசனம் கைகூடுமென்றும் அந்த ஆத்மதரிசனம் ஏற்பட்டால்தான் இந்திரியங்களை அடக்கமுடியுமென்றும் கூறி ஒன்று மற்றொன்றைப் பொருந்தியிருக்கிறதென்றும்ஆகையால்இரண்டும் ஒருங்கேகூடாமல்இழப்பது சம்பாவிதமென்றும் சாஸ்திரதத்துவத்தை விளக்கி மேலிருந்த அன்யோன்யாச்ரய தோஷத்தை நிவர்த்தி செய்யவும் தவம்பயன்படவும் தன்னிடத்தில் "சரணாகதி செய்துகொள்" என்று பரமகிருபையால்அருளிச் செய்ததை நாம் ஞாபகஞ் செய்துகொள்ள வேண்டும். இதுபோலவே பகவானைக் கண்டாலல்லது, இந்திரியங்களை அவனல்லாத மற்ற விஷயங்களிலிருந்து இழுத்து அடக்கமுடியாமையும், இவ்விந்திரிய ஜயம் வந்தாலொழிய பகவானைக் காண்பதரிதென்பது மல்லவோ ஏற்படுகின்றன.ஆகையால் பக்திசெய்வது கஷ்டசாத்தியம் மாத்திரமன்றி அது நேரவேநேராது என்று ஊஹிக்கலாமோ வென்றால், அதற்கு அப்படிப் பயப்படவேண்டாம், நல்ல பிரீதியுடன் காணவேண்டுமென்ற அவா உள்ளவர்களுக்குச் சுலபமாய்க் காண்கைக்கு எளியன் அவன். ஆகையால் ஆசையோடு அவனைப் பற்றுங்கோள், என்று இப்பதிகத்தில் அவன் சுலபத்தைப் பலவாறாக அநுஸந்தித்து நமக்குத் தேர்ச்சியை யூட்டுகிறார்.

இரண்டாம் பாசுரம்.

எளிவரும் இயல்வினன் நிலைவரம் பிலபல பிறப்பாய்
ஒளிவரும் முழுநலம் முதலில கேடில வீடாம்[யோன்
தெளிதருநிலைமையது ஒழிவிலன்முழுவதும்இறை
அளிவரும் அருளினோடு அகத்தனன் புறத்தனன்
[அமைந்தே.

அவதாரிகை:-எந்தத் தெசையில் எவ்வண்ணம் எப்படிச் சுலபன் என்பதை இப்பாட்டில் அவதார விசேஷங்களால் எடுத்து விவகரிக்கிறார்.

பதவுரை.

நிலை - இந்த ஜந்மத்திலே பிறப்பு என்கிற நிர்ணயம் (அதாவது மச்ச கூர்ம ராம கிருஷ்ண ஹயக்கிரீவ முதலான அவதாரங்களாய்ஜந்மித்து); வரம்பு-இந்தச் சேஷ்டைதான் என்ற அளவு; இல - இல்லாமல், பலபிறப்பாய் - பல யோனிகளிலும் பிறந்து,அதாவது திவ்யாவதாரம் செய்து; இளிவரும்-தாழ்மை பொருந்தும் சுலபமான; இயல்வினன் - அவதாரம் செய்யும் சுபாவத்தை உடையவன்.

முதலில்-உற்பத்தியில்லாதவன், அதாவது அநாதியானவன்; கேடில் - நாசமற்றவன்-முடிவில்லாதவன்; ஒளிவரும் - பிரகாசிக்கின்ற; முழுநலம் - ஞானம் பலம் சக்தி ஆநந்த முதலான நித்திய கல்லியாண குண பரிபூரணன். வீடாம் தெளிதரும் நிலைமையது என்று அந்வயிக்கவும். வீடாம் - மோக்ஷரூபமான தெளிவு - சாக்ஷாத்காரம்; தரும் நிலைமையது - தரும் அது நிலைமை என்றந்வயம், தருகையாகிற அந்தப் பிரஸித்தமான சுபாவத்தையும்; முழுவதும் - இவையத்தனையும்; ஒழிவிலன்-விடாதவனாய் இறையோன் - ஈசனாய், அதாவது எப்போதும் ஈசுவர சுபாவத்தை விடாதவனாய்; அளிவரும் - சீதளமான பூரண கிருபை உடையவனாய்; அமைந்து - பிறர் தங்களோடு அமைக்கவல்லவனாய்; அகத்தனன் - பக்தி செய்கிறவர்களுக்கு உள்ளிலிருப்பவன் அல்லது மனதுக்கினியன்; புறத்தனன் - அவனிடம் பற்றில்லாதவர்களுக்குப் புறம்பே இருப்பவன்.

ஒருவனுக்குச் சுலபனாயும் மற்றவனுக்குத் துர்லபனாயுமிருக்கும் ஸ்திதி எம்பெருமானுடைய அதிசயசக்தி என்கிறார்.

இப்பாசுரம், அவதாரங்களில் எம்பெருமான் தன்னுடைய நிரதிசய நித்திய சக்திகளையெல்லாம் பூரணமாய்க்கொண்டு அவதரிக்கிறார் என்று கற்பிக்கின்றது.

இம்மஹானுபாவன் இங்குவெளிப்படையாய் எடுத்துக் கூறியிருக்கின்ற அவதார ரஹஸியம் "வீடாம் தெளிதரும் நிலைமையது"; அதாவது, பகவான் அவதார விசேஷங்களிலும் "மோக்ஷ பிரதத்துவ" குணத்துடனே ஜந்மிக்கிறான் என்பது இராமாயணத்தில் ஜடாயுவுக்கு மோக்ஷம் அளித்ததும்,கிருஷ்ணாவதாரத்தில் சிவபெருமான் அருள் நிரம்பப்பெற்று அதனால் தன்னைக் குறித்துத் தவஞ்செய்த கண்டாகரணனுக்கு மோக்ஷம் கொடுத்ததும் ஞாபகத்திற் கொள்ளத் தக்கன.

# ஆச்சரிய சூடாமணி

[273-வது பக்கத் தொடர்ச்சி.]

## 5. அசோகவன அங்கம்

மண்டோதரியும் பணிப்பெண்ணும் வருதல்.

மண்டோதரி:—இப்படியும் நேருமோ!

பணிப்பெண்:—இறைவி,பருவரல் ஏதோவுன் உள்ளத்தில் உறுத்துகிறதென்று நின் திருமுகங் காட்டுகின்றது.

மண்டோ:—அடி, அசோகவனத்திற்கு நீ இதன் முன் போயதுண்டோ, இல்லையோ?

பணிப்:—ஆம், அங்குத்தானே தங்கள் கணவன் பிடித்துவந்திருக்கிற வொரு முனிவன்மனைவி இருக்கிறாள். அவளுக்கென்ன ?

மண்டோ:—அன்னவளால் இன்னல் எய்துமென வெருவுகின்றேன்.

பணிப்:—தலைவி, மான்பிணைக்குப் புலிப்போத்தின்பால் ஒருபோதும் நம்பிக்கை நிலைக்காது அவள் வந்ததேபோல் போயும் விடுவாள். தாங்களே இலங்கைக்கு அரசி.

மண்டோ:—அடி, பித்தி, என்னொடு நீ நெடிது நாள் பயின்றிருந்தும் என் கருத்துணராமல் உழல்கின்றாயே. தீக்கனவொன்று யானின்று கண்டுளேன்.

பணிப்:—கலங்கவேண்டா, அம்ம, அதனைக் கூறியருள்க.

மண்டோ:—கேளடீ!

பணிப்.—கேட்கின்றேன்.

மண்டோ:—திசைதோறும் பரந்துநீண்ட மறிதிரை நிரைபுரள, திமி திமிங்கலம் நீர்யானை முதலை முதலிய விலங்குகள் தத்தளிக்கும் மரகத மலையன நீனிறக் கடனீரை, இங்குமங்குமிருந்து வந்து விழுந்த அற்பப்புழுக்கள் ஒரு முகூர்த்தத்திற்குள் முற்றிலுங் குடித்து வற்றச்செய்தன.

பணிப்:—ஐயகோ! இப்படியா! பின்?

மண்டோ:—மாசுற்ற கொண்டையும், பல்லெலாம் உதிர்ந்த வாயும், தீப்பொறியனைய கண்களும், தோடணியாக் காதுகளும் உடையாள் ஒரு கைம்பெண் வந்து என்னைத் தழுவினாள்.

பணிப்:—ஐயோ, என் செய! பிறகு, பிறகு—?

மண்டோ:—இந்தச் சீதையோவெனின்; தனமிசைச் சந்தனம் பூசி, தலைமுடியில் மல்லிகைமலர் சூடி, வெண்பட்டுடுத்து, தன் நாயகன் நீட்டிய கரதலம்பற்றிப் புஷ்பகவிமானத்தி லேறக்கண்டேன். இவ்வளவில் தூக்கங் கலைந் தெழுந்துவிட்டேன்.

பணிப்:—அரசி! வருந்தவேண்டா. கனவுகளுக்கு வைத்தியர் பல காரணங்கள் கூறுகின்றனர். இருந்தாலும் மூவுலகத்திற்கும் பயகாரணர்களான நமக்கு எங்கிருந்து இப்பொழுது பயமுண்டாகும்.

(திரைக்குள்) மேகங்கள் மகரந்தம் படிந்த இதழ்களுடைய மலர்மாரி பொழிந்திடுக! சுரநதியலைகளிற் படிந்துவரும் சுவர்க்கக் காற்று எங்கும் வீசுக ; இளவேனில் முதலிய எல்லாப் பெரும்பொழுதுகளும் ஒன்றுசேர்ந்து நந்தவனத்தினழகை வளர்த்திடுக ; சந்திரன் தன் கிரணங்களை வீசிக்கொண்டு சுகமாகத் திசையெங்குஞ் சுற்றித் திரிந்திடுக.

மண்டோ:—ஏடி! இதோ, ஓர் விளம்பரம் கேட்கின்றதே !

பணிப்:—அரசி, ஆம்.

மண்டோ:—நீ போய் இதன் காரண மறிந்துவா !

பணிப்:—அரசி , அப்படியே ! (போதல்)

மண்டோ:—இதிலென்ன யோசனை வேண்டியது. அம்மானிட மாதின் மனதை ஆசைப்படுத்த மகாராஜாவின் முயற்சியே இது.

பணிப்:—(வந்து) அரசி! வெற்றி சிறக்க; (காதில்) இப்படியே !

மண்டோ:—உன்னை வீணே வருததினேன். மகாராஜா இப்பொழுது என்ன செய்கிறார்.

பணிப்:—அவளைப் பார்க்க பாலைக்கால அலங்காரஞ் செய்துகொண்டிருக்கிறார்

மண்டோ:—அடி ! என்னுடன் வா. மகாராஜாவுக்குத் தெரியாமல் அசோகவனத்திற்குச் சென்று நாம் கொடிகளுக்கிடையில் மறைந்துநின்று விருப்பமிலாச் சீதையிடம் அரசன் செய்யும் காமச்செய்கைகளை இளிவரக் காண்போம்.

பணிப்:—அரசி, கட்டளைப்படியே. (இருவரும் போயினர்.)

பரிசனங்களோடு காம உணர்ச்சியுடன்
ராவணன் வருதல்.

ராவண :—(மெய்ப்பாடுடன்) வருஷவா, யான் வெகுகாலமாக ஊரைவிட்டு விலக்கின சூரியன் மறுபடியும் இப்பொழுது இலங்கையில் வரக் காரணமென்ன? மந்திரி சித்திரயோதியை விரைவில் அழைத்துவா.

கஞ்சுகன்:—(தனக்குள்) யஜமானனுக்குக் காமப் பயித்தியம் ஏற்பட்டதே. ஏனென்றால், இரவிலுள்ளவனும், கண்களுக்குக் களிப்பை விளைவிப்பவனும், கடலலைகளில் ஊசலாடுபவனும், மிகக் குளிர்ச்சியான இன்பங்கொடுக்குங் கிரணங்களால் தொடுபவனுமான தண்கதிர்ச் சந்திரனையும் இவர் தெரிந்துகொள்ளவில்லையே!

ராவண:—ஏன் தாமதிக்கிறாய்!

கஞ்சுக:—கட்டளைப்படியே! (தனக்குள்) இவ்வித நோய்க்கு மந்திரிமார் வைத்தியர்களல்லர். (போதல்)

ராவண:—(ஆலோசித்து) இவன் சூரியனல்லன்; நான் அடைக்கலங்கொடுத்த சந்திரனே! ஏனென்றால், சந்திரசூரியரை வேற்றுமைதெரியாத காமுகரை ஆயிரங்கிரணங்கள் சுடும்பொழுது சந்திரனுக்குஅடையாளமான வோர் இந்திரநீலக் கற்றுண்டுபோல் விளங்கும் களங்கமிருக்கின்றதே! (ஆலோசித்து) இத்துன்பத்தை நானே விளைவித்துக் கொண்டேன். திசைகளி னருகிலுள்ள குளங்களிலுண்டாகுந் தாமரைகளையும் என் கட்டளையின்றி வாடச்செய்யாத சந்திரன் இப்பொழுது எதிரில் நின்று என்னைச் சுடுகிறான். வலியற்றவனும் சில நிலைமையில் வலியவனாதலுங் கூடும்.



மந்திரி வருதல்.

மந்திரி:—(சுற்றிப்பார்த்து) ஆச்சரியம்! வெகுகாலத்திற்குப் பிறகு அரக்கர்நாடு சந்திரகிரணச் சுவையை அறிகின்றது. அமிர்தத்திற் கிருப்பிடமும் மன்மத சேனைத் தலைவனும் தண்கதிராற் களிப்பூட்டுபவனுமான இச் சந்திரன் இதோ உதிக்கின்றான். அவன் கிரணங்களிற் படிந்தஉலகம் ஊழிக்காலத்திற் பாற்கடலுள் முழுகியதுபோல காணப்படுகின்றது.

ராவண :—சந்திரனே ! நான் மாரனுக்குட்பட்டபொழுது உன் கிரணங்கள் தீயுமிழ்கின்றன. இரவாசனே! அதன் காரணம் உன் வலிமையுமன்று, மன்மதன் திறமுமன்று; துன்புற்ற ஜனகன் மகளான சீதையின் திறமையே யாகும்.

மந்திரி:—வரம்புகடந்த ராவணனை மதியாது இராமனிட மிருந்து நான் உயிர்விடுவதா! அல்லது நட்பற்ற சொற்களைக்கூறித் தலைவனிடமிருந்து கேடடைவதா! இவ்விரண்டும் எனக்கு நன்மையல்ல; இவைகளுள் இராவணனிடமிருந்து உயிர்விடுதலே எனக்கு மேன்மையாகும். ஏனென்றால் தலைவனுடைய அழிவைப் பார்க்காமலிருக்கலாகும். தலைவன்நிலைமை மிக்க துன்பமே! இவரை இவ்வாறு திரும்பாற்கட்டித் தூணலடிக்கின்றானே! தலைவனைப் பார்ப்போம். (சுற்றி நடந்துபார்த்து) இதோ யஜமானன்! மனதிலாழ்ந்த நினைப்பால் அடிக்கடி கொட்டாவிவிட்டு நெட்டுயிர்ப்பாற் காய்ந்த உதடுகளுடன், கருநெய்தற்போன்ற நீலநிறம் மாரிக்கால முடிவிலுள்ள மேகம்போல மாறி வடவைத்தீ கடலைப் பருகுவதுபோலப் பிறரறியாமல் மன்மதன் ரகசியமா யெரித்தலால் மெலிந்த சரீரத்துடனிருக்கின்றார். (அருகிற்சென்று) சுவாமி! வெற்றி சிறக்க!

ராவண:—சிறப்பாக ஏதேனுஞ் செய்தியுண்டோ!

மந்தி:—(தனக்குள்) யஜமானன் தெளிவாகப் பேசுகின்றாரே ! (வெளிப்படை) உலகப் பேச்சு ஒன்றுண்டு.

ராவ:—நில். ராமன் வாலியைக் கொன்றுவிட்டுச் சுக்ரீவனுடன் நட்புக்கொண்டிருக்கின்றான் என்றுதானே !

மந்தி:—அதுதான்—இன்னு மொன்றுளது.

ராவ:—அப்படியானாற் சொல்.

மந்தி:—அவனுத்தரவால் சீதையைத் தேடவேண்டித் திசையெங்கும் குரங்குச்சேனைகள் திரிகின்றன.

ராவ:—என்ன ! என்ன ! திசையெங்கும் சீதையைத்தேட அவனுத்தரவால் வானரப் படைகள் திரிகின்றன என்றா? பார். போர்முனையில் பாதாள மலைகளைப் படைகளாக் கொண்டு தேவர்களை வென்ற அரக்கர்சேனை போர்செய்யக் கச்சைகட்டி யிருக்கும்பொழுது, நந்தனவனத்து மரங்களிற் சுற்றியிருக்கும் கொடித்தளிர்களைச் சிதைக்கும் குரங்கு மந்தை எவ்வாறு எதிர்நிற்கும்?

மந்திரி:—குரங்குகள் இகழத்தக்கவைகளே, ஆனால்-

ராவண:—சொல், அதென்ன !

மந்தி:—"வில்லாளிகளால் வெல்லமுடியாதவன் இராமன்" என்று சொல்கிறார்கள்

ராவண.—என்ன! என்ன! வில்லாளிகளால் வெல்ல முடியாதவன்ராமன், என்றா? பார் பரமசிவன் வீற்றிருக்குங் கைலையையும்அலைக்கமுடன்றகைகளுடையவனும், கிரகங்களை அவப்படுத்தித் தம் பிறப்பிடம் விட்டுச் செல்லச் செய்தவனும் இந்திரனும் எதிர்நிற்க முடியாதபடி போர்த்தொழில் மேற்கொண்டவனுமான எனக்கோ மனிதனைப் பகைவனாக்கக் கூறுகின்றாய்! ஐயோ பாவம்; நீ ஏளனஞ் செய்யத்தக்கவனே!

மந்தி:—என்ன ! என்ன ! ராமன் மனிதனென்றா? ரகுநாயகனான இந்த இராமன் வெறும்மனிதனல்லன். சூரியகுலத்திற் பிறந்து தாய்தந்தையர் கட்டளைப்படி காட்டிலுறைகின்ற இவன் உலகத்தோற்றத்திற்கும் அறிவிற்கும் காரணனான திருமாலே யாகும். பாருங்கள்.

# குறுந்தொகை.

[ 272-வது பக்கத் தொடர்ச்சி ]

ஓதலாந்தையார்] 12 [பாலை

தலைமகன், தலைமகன் பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு, "கொடிய காட்டின் வழியே தனித்துச்சென்ற அவரைக்குறித்துக் கவலாது என்னைப்பற்றிக் கவலுவது எவன், நான் ஆற்றுவேன்" எனக் கிழத்தி உரைத்தது.

எறும்பி னளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே;
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமற் றிவ்வழுங்க லூரே.

(உரை). எறும்பின் வளையைப்போலச் சிறிய பல சுனைகளை (பக்கத்தே) உடைய, கொல்லன் உலையிடத்துள்ள பட்டடையைப்போல வெப்பமிகுந்த பாறையின் மீதேறிக் கொடிய வில்லையேந்திய வேடர் தம்பகழியால் வழிச்செல்வோர்களைக் கொல்லும் கவர்த்த பல வழிகளையுடையது அவர் தேர்மேலேறிச் சென்ற காட்டுநெறி என்று சொல்லுவார்கள். அதைக்குறித்து வருத்தப்படாது இவ்விரங்குதலையுடைய ஊரார் அயலொன்றைக்குறித்து வருந்துகின்றார். (இஃதென்ன அறியாமை?)

உலைக்கல்- இரும்பைக் காய்ச்சிவைத்தடிக்கும் அடைகல்; the anvil. கவலை-பலமுகமாகப் பிரிந்து செல்லும் கவர்த்த வழி. நொதுமல் - அயல் (விஷயம்). அழுங்கல் - இரங்குதல், வருந்துதல்.

சிறிய பல சுனைகளைத் தன்பக்கத்திலே யுடையதாய்ச் சூரியன்வெப்பத்தாற் சூடுண்ட பாறைக்கும், கொல்லன் உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சித்தோய்க்கும் நீர்க்குழிசிகளினிடையே இருக்கும் வலிய வெப்புண்ட அடைகல்லுக்கும் உவமைப்பொருத்தம் உணர்க.

---

கபிலர்] 13 [குறிஞ்சி

*தோழி ஆற்றும்வகையான் ஆற்றுவித்தும் தலைமகனது பிரிவாற்றாது வேறுபட்ட கிழத்தி தனது பசப்புறு பருவரலைத் தோழிக்குச் சொல்லியது.*

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த இரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலை சேக்கு நாடன்
நோய்தந் தனனே, தோழி;
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே.

(உரை). அழுக்கில்லாமற்கழுவப்பட்டயானையைப்போலப் பெரிய மழையால் அலசலுற்ற கரிய சருச்சரையையுடைய நெருங்கின கற்பாறை காண்பார்க்குத் துன்பமுண்டாகும்படி ஒருபக்கத்திலே தங்கும் குறிஞ்சிநிலத்தலைவன் (தனது பிரிவால்) எனக்குக் காமநோயைத் தந்தான். அதனால், என் தோழீ, குவளையைப் போன்ற என் கண்கள் பசப்புற்றன.

இருமை - கருமை. பிணர் - சருச்சரை, வழுவழுப்பாயிராமல் காடுமுரடாயிருத்தல்: (being of very rough, uneven surface). பைதல் - துன்பம், வருத்தம். பசலை - கணவரைப் பிரிந்து காமநோயால் வருந்தும் மகளிரது மேனியிலுண்டாகும் ஒருவித நிறவேறுபாடு; உடலே யன்றிக் கண்ணும் பசப்புறுதலுண்டு.

கருங்கற்பாறை யானையைப்போலத் தோன்றும்என்பதை,

சுரும்புணக் களித்த புகர்முக வேழம்
இரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்
(ஐங்குறுநூறு - 239)

குறுங்கா லிற்றிப் புன்றலை நெடுவீழ்
இரும்பிணர்த் துருகற் றீண்டி வளிபொரப்
பெருங்கை யானை நிவப்பிற் றூங்கும்
குன்றம் (அகம் 57)

என்ற பிறவிடத்துங் காண்க.

---

தோல்கபிலர்] 14 [குறிஞ்சி

*தோழியால் தலைவியைப் பெற்றுக் கூடவிரும்பிய தலைமகன், அவளைக் குறைவேண்ட அவள் நேராதுமறுத்துழி, 'இனி நான் நாணொழிந்து பல்லோரிகழ மடலேறுவல்' என்று புலந்து கூறியது.*

அமிழ்துபொதி செந்நா வஞ்சி, அந்த [யைப்
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவை
பெறுகதில் லம்ம யானே ; பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே ; மறுகி
னல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே.

(உரை). தன்னிடத்தே அமிர்தம் அடங்கிய செவ்விய நாவினையுடைய மாதே, ஒழுங்காய் விளங்கும் கூரிய பற்களையும் சிலவாகிய சொல்லினையுமுடைய அர்ங்கையை இப்பொழுது உன்னுதவியால் நான் பெறக்கடவேனாக ; பெற்ற பின் அதை இவ்வூர் அறிவதாக.'நல்லவளான நங்கையின் கணவன் இவன்' என்று கண்டோர் பலரும் வருந்திக் கூறுமாறு தெருவிலே மடல்மாவூர்ந்து செல்வதற்கு இப்பொழுது சிறிது நாணுகின்றேன்; (நீ என் குறைமறுத்தால் நாணத்தை விட்டொழித்துப் பின் மடலூர்வதையன்றி நான் ஆற்றுமாறில்லை).

வார்ந்து - ஒழுங்காக, வரிசையாக. ' தில் ' முன்னது விழைவும், பின்னது காலமும்உணர்த்தும் ஓரிடைச்சொல். மறுகிப் பல்லோர் கூற - 'மடலூர்வதற்கு' என்பது குறிப்பெச்சம்). ' மறுகின் ' என்றும் பாடம்.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 15 [பாலை

*களவொழுக்கத்துத் தலைமகன் தலைவியை உடன்கொண்டுபோக, அவளைக்காணாது தாயரும் பிறரும் வருந்தி நின்ற காலை அறத்தொடுநின்ற தோழியால் உண்மையை உணர்ந்த செவிலி, நற்றாய்க்கு அக்களவுக்கூட்டத்தை அறிவித்தது.*

பறைபடப் பணில மார்ப்ப, இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே, தோழி, ஆய்கழற்
செயலை வெண்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

(உரை). தோழீ, சிறந்த கழலை யணிந்து அசோகந்தளிர் போன்ற வெற்றிவேலை யேந்திய விடலையோடு, கூட்டமானவளையல்களையணிந்தமுன்கையையுடையமடந்தைக்கு (உளதாய) நட்பு, இந்தப் பழைய முதுமைவாய்ந்த ஆலமரத்தின்கீழ் மன்றத்தில் கூடியிருந்து சொன்ன நல்லூர்க் கோசருடைய சிறந்த மொழியைப்போல, பறைகள் ஒலிக்கவும் சங்குகள் முழங்கவும் உண்மையாகின்றது.

இறை - தங்குதல், கொள்பு - கொண்டு, வாய்-வாய்மை, உண்மை. செயலை - அசோகு. வென் - வெற்றி. தோழி - நற்றாயைச் செவிலி விளித்தது. முதுமை+ஆலம், மூதாலம். பொதியில்=அம்பலம், பொதுக்கூட்டங்கள் கூடுமிடம்.

விடலையோடு மடந்தை நட்பு கோசர் நன்மொழி போல, பறைபடப் பணில மார்ப்ப வாயாகின்று, என முடிக்க -இவ்விருவரிடை நட்பு நிச்சயமாகப் பலரறிய நன்மணமாய் முடியும் என்றவாறும்.

கோசர் மொழித்திறம்பாமையை மேல் "ஒன்று மொழிக் கோசர் போல்" என்ற 73-ம் பாட்டானும் தேர்க.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 16 [பாலை

*தலைமகன் பிரிவு நீட்டித்தவழி ஆற்றாளாகித் தலைவி தோழிக்குச் சொல்லியது.*

உள்ளார் கொல்லோ, தோழி, கணவர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளிக் காடிறந் தோரே.

(உரை). செவ்ந்த காலையுடைய பல்லி,பொன்னால் அழகுபெறச்செய்த அம்பைச் செப்பஞ்செய்யும் கருமார் தமது விரல்நகத்தாலதைப் புறட்டும்போது உண்டாகும் ஓசையைப் போலத் தனது துணையை அழைக்குமிடமாகிய அழகிய தாளையுடைய கள்ளிநிறைந்த காட்டிடைச் சென்றாராகிய கணவர் (அதனைக் கேட்டும்) நம்மை நினையார் கொல் (நினைந்து விரைவின் மீளார் கொல் )

'தம்' என்பதைச் 'செப்பங்கொண்மார்தம் உகிர்நுதி' என மாற்றிக்கூட்டுக. பயிரும் - கூவியழைக்கும். அங்காற் கள்ளி என்றான், அது தலைவன் தலைவியை நினைந்து மீளுமாறு பல்லி பயிருமிடமாய் இருத்தல்பற்றி. அம்காடு - அம், சாரியை. இறந்தோர் - சென்றார், நீங்கியவர்.

---

பேரெயின்முறுவலார்] 17 [குறிஞ்சி

***தோழியினால் தலைவியின் கூட்டம்பெறவேண்டி அவளை இரந்து பின்னின்ற தலைமகன், அவள் தன்குறையைமறுமற் பொருட்டுக் 'காமமுழந்தார் மடலேறுவர்' என உலகியல் மேல் வைத்துக் கூறியது.***



மாவென மடலு மூர்ப; பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப;
மறுகி னார்க்கவும் படுப;
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.

(உரை). காமநோய் முதிர்ச்சிகொண்டால், (அந்நோயால் வருந்துவோர்)குதிரையாகப் பனைமடலையும் ஊர்வர்; பூமாலையாகக் குவிந்த மொட்டையுடைய எருக்கினாலாகிய கண்ணியையும் சூடுவர்; (பலருமறியத்) தெருவின்கண் (தமது குறைகளைக்கூறி) முழக்கவும் முழக்குவர்; பிறிதும் செய்வாராகுவர்.

மா - குதிரை. காழ்க்கொளல் - நன்றாய் முதிர்ந்து உள்ளே வயிரங்கொள்ளுதல்; காழ் - மரத்தினுள்வயிரம். மடலேறுவார், எருக்கங்கண்ணியைச் சூடி, என்புமாலையையணிந்து, சாம்பலைப் பூசிக்கொள்ளுதல் மரபு. 'பிறிது மாகுப' என்றது 'வரைபாய்ந்து' இறந்துபடுதலை. அதன் கொடுமைநோக்கி வெளிப்படையாகக் கூறவஞ்சி அவன் இவ்வாறு குறிப்பாற் சுட்டினான் என்க.

---

கபிலர்] 18 [குறிஞ்சி

*இரவுக்குக்குறிக்கண் வந்து தலைவியுடன் கூடி நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டுக் களவொழுக்கந் தவிர்ந்து தலைவியை வரைந்துகொள்ளுமாறு வருட்டியது.*

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட, செவ்வியை யாகுமதி;
யாரஃ தறிந்திசி னோரே? சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்
கிவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.

(உரை). மூங்கிலாகிய வேலி சூழ்ந்த வேரிலே பழுத்த பழத்தையுடைய பலாமரங்கள் செறிந்த (மலைச்) சாரலையுடைய குறிஞ்சிநிலத் தலைவா, நீ (இக் களவொழுக்கத்தைவிட்டு) செம்மையான ஒழுக்கத்தை உடையவன் ஆகுக. (இவ்வாறே நீ ஒழுகுவையாயின் அதனால்) தலைவிக்கு நேரும் ஏதத்தை யார் அறிந்துள்ளார்? சாரலிடத்தே (மரத்தின்) சிறிய கிளையிலே (அது தாங்கமாட்டாத) பெரும்பழம் தொங்குவதைப்போல இவளதுஉயிரோ மிகச்சிறியது; இவளுற்ற காமநோயோ (அவ்வுயிர் பொறுக்கலாற்றாத அவ்வளவு) பெரியது. (இனிச் செயற்பாலதை ஓர்ந்து நீ செய்வாயாக.)

வேரல்-மூங்கில். கோள் - பழம். 'அஃது' என்றது தலைவி அருந்துயரால் இறந்துபடுவாளாதலை. கோட்டு - ஏழாம் வேற்றுமைத் தொகை. தவ - மிகவும்.

இறைச்சி:—மூங்கில் வேலியையுடைய சாரலிடத்துள்ள வேர்ப்பலாவின் அரியபழத்தைப்போல காவல்மிக்க மனையிடத்துள்ள சிறந்த தலைமகளும் எய்தற்கரியள்; நீ இரவில் வாரற்க, என்று குறித்தவாறும்.

---

பரணர்] 19 [மருதம்

***பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன், மாறுத் துனியுற்றுப் பிணங்கிநின்ற தலைமகளது ஊடலைத் தணிக்கப் பலவாறு முயன்றும் பலியாமைகண்டு தன்னெஞ்சொடு புலந்து கூறியது.***

எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினை மதி, வாழிய நெஞ்சே; மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாருளர் நமக்கே.

(உரை). 'எவ்வி' என்னும் வேளை இழந்து வறுமையுற்றவரான பாணரது (பொற்) பூ அணியப்பெறாத வறுந் தலையைப்போல பொலிவழிந்து வருந்தினை, என்நேஞ்சே; நீ வாழ்வாயாக. வீட்டின் பக்கத்தேயுள்ள மரத்தின்மீது படர்ந்துள்ள விளக்கமுற்ற முல்லையின் பூக்களின் மணம் நாறும் பலவாகிய கரிய கூந்தலை யுடையார் எவருளார் (நம்மிடத்து இரங்குவார்?)

'எவ்வி' என்பான் ஒரு பெருங்கொடையினன வேள் என்பதை "ஓம்பாவீகை மாவே ளெவ்வி" (புறநானூறு. 24) என்பதனாலறிக. பாணர் - யாழுடன் இசைபாடி வாழுமோர் மரபினர். இனை-இன்னா, இனைந்தனை, வருந்தினை. மதி - முன்னிலையிடத்து அசைச் சொல். மௌவல் நாறும் பல்லினையும் கரிய கூந்தலையும் உடையார் எனப் பிரித்துரைப்பினுமாம். எல் - இலக்கம், விளக்கம்.

---

கோப்பெருஞ் சோழன்] 20 [பாலை

*பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனது கருத்தைத் தனக்குணர்த்தியதோழிக்குத் தலைவி மனநொந்துகூறியது.*

அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்,
உரவோ ருரவோ ராக ;
மடவ மாக, மடந்தை, நாமே.

தோழீ, அருளையும் அன்பையும் நீத்துத் துணையாயினரைத்துறந்து பொருள்வேட்டுப் பிரிந்து செல்பவர் அறிவுடையார் என்பையாயின், அவ்வாறு பிரியவல்ல வன்மையை உடையார் அறிவுடையோராகவே இருக்கட்டும்; (பிரிந்திருக்க மாட்டாத) நாம் அறிவிலேமாகவே இருப்பேம்.

அருள் - வருத்தமுற்ற எல்லா உயிரிடத்தும் இயல்பாகச் செல்வதாகிய கருணை; அன்பு-தொடர்புடையார் மாட்டே உளதாகும் நேசம். உரம்- வன்மை. உரம் - அறிவு, ஞானம். மடவம் - மடமைத்தன்மையுடையேம். மடந்தை - அண்மைவிளி.

---

ஓதலாந்தையார்] 21 [முல்லை

*கார்காலத்து மீள்வதாகக் கூறிச்சென்ற தலைமகன் அப்பருவம் வந்தும் வாரானாக, ' இனித் தலைவியை ஆற்றுவிப்பது எவ்வாறு? ' என்று கவன்ற தோழிக்கு, ' யான் ஆற்றுவல் ' என்று தலைவி கூறியது.*

வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய்வழங் கலரே.

(உரை) வண்டுகள் மொய்க்கும்படி நெருங்கியமுல்லையின் பூங்கொத்துக்களை இடையிலே உடுத்துப் பொன்னாற் செய்த அழகிய ஆபரணங்களைப் பூண்ட பெண்களினது கூந்தலைப்போலத் தோன்றும் புதிய பூக்களை (யுங் காய்களையும்) உடைய கொன்றைக்காடு கார்காலம் வந்துவிட்டதெனக் தெரிவிக்குமாயினும், யான் அதனைத் தெளியேன். (ஏனெனில்) அவர் ஒருகாலும் பொய்சொல்லார் (என்ற தேற்றத்தால்.)

கொடி - கொன்றையின்மீது படர்ந்த முல்லைக்கொடி. தன்னைத் தழுவிப் படர்ந்த முல்லையின் பூங்கொத்துக்கள் இடையிலுடுத்த பூவுடையாகவும், மஞ்சள்நிறப் பூக்கள் பொற்கலன்களாகவும், காய்கள் சுருண்டவிழ்ந்து தொங்குங் கூந்தலாகவும் கொன்றைமரம் பெண்களெனத் தோன்றும் என்றார். முல்லையுங் கொன்றையுமாகிய முல்லைக்குரிய பொருள்கள் கார்காலத்தே பூக்குமியல்பின.

# இலஞ்சிப் பாவை.

[ 277-வது பக்கத்தொடர்ச்சி ]

## 12. காதலியம்பல்.

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காத லியம்புங்கொல்

நளவெண்பா.

வெவ்விய புளிஞரும் வெருவித்துறக்குமவ் வெம்முழையுழை புகுந்த சுதஞ்சனையை விட்டகன்ற ஸ்ரீபாலன் எங்குற்றனனென எவரும் அறிந்திலர். கருணிக் கருகிலோர் கன்மிசை கருகிய முகத்திேடு ஆற்றுதற்கரிய துயருந் தானுமாய் வைகிய தெரிவை தன் தாளம் புரள்தரு கயல்க ளிரண்டுஞ் சிவப்பேறத் தரியாளுய்,பனிப்புறுநீரைத் தணிப்பது கருதிப் பரிவுடன் இன்சொல் சில ஆலாலன் சொல்லன்மேவினுன்.

"அவர் வருவாரம்மா வருவார். சொல்வதைக் கேள். மகிழ்வுடன் மடங்கி வருவார். இராதாகிருஷ்ணனது தறுகணுண்மை படைத்த தனிப்பெரும் வீரரும் அஞ்சிநடுங்கி அடங்கியகுரலால் கழுத்துநுடங்கப் பிறர் கேளாவண்ணம் காதில் வாய்வைத்துப் பேசுமிந்நாள், அலைக்கவரு மிடுக்கணைத் தொலைக்கும் வழியறிந்து, அலையெறி ஆர்வம் பொலிதரு பார்வையுடன் உன்னை யணுகி வருவார். நேற்றுநான் கண்டதைக்கேள். திண்ணியரனைவருப் படகுகளிலேறி யேந்தியதீப்பந்தங்கள், எண்ணுதற்கரிய நள்ளிரவில் இங்குமங்கும் சென்றவோர் தோற்றம் கார்காலத்தில் கருநிறக் கொண்டலைக் கிழித் திடையிடை யொளிரும் மின்னல்போன்றிருந்தது. இன்றுகாலையில் அப்படகுகளை மீண்டுங் கண்டேன். அவையாவும் காப்புத்தீவைச் சூழ்ந்து செறிந்து கிடத்தல், அம்பரத்தே ஆடுகின்ற வெம்பருந்தினிருநிழல்கண் டஞ்சி வாரணத்தாயின் சிறகடைக் குஞ்சுகள் கடுக்கும். மொய்ம்புடை வீரரெவரும் வெளியிடைப் போரஞ்சி நீரிடை நெருங்கிநின்றுல், ஸ்ரீபாலர் உனக்கு ஏற்றதோர் புகலிடம் கண்டுவர வேண்டாமோ?"

"ஆலாலரே, இவையாயும் வீண்மொழிகள். எனது அச்சம் இவற்ருல் அடங்காது. வெளியே போவாராய் அவரென்பால் விடைபெற்று எனக் காசிகூறிச்சென்ற போது, கண்ணிடைக் கலங்கிய நீர் அவர் கருத்திடைக் கொண்ட உயரிய எண்ணங்களை மூழ்த்திலது. பெண்ணெனினும் நான் அவர் கருத்தின் மேன்மையை நன்கு அறிவேன். போர் நெருங்கிவிட்டதென்று கேள்வியுறுகிறுர்! தானே யதற்குக் காரண மென வெண்ணுகிறுர்—அன்று நும் கனவில் மால்வண்ணர் சிறைப்பட்டிருக்க அவருக்கு நானே விலங்கிடக் கண்டதாய்ச் சொன்னபோது அவர் அலறியதை அறியீரோ? நும் கனவின் பயன்கருதியோ அவர் உள்ள முடையலாளுர்? அன்றன்று; தன்னுல், - நம்மால் - அவருக்கும், இராதாகிருஷ்ணனுக்கும் விளையப்போகும் தீங்கையே எண்ணி நைந்தார். நமக்கு உண்மைநேயராய் அவரிருவரும் இருந்து வந்து நமக்காகஅவர் இன்னலுழப்பது தரியா ரென் தந்தை. ஆகையால் இனி இவ்விடம் இருப்பது தகாது என்று ஏகினுர். அவர் இறுதியில் சொன்ன மொழிகளை உற்று நோக்கும். இங்கே யில்லாவிடினும் இன்ெனுரு உலகத்தில் நாம் கூடுவோம், என்ருரே அது ஏன்? அந்திக் காலத்திற்குள் திரும்பி யவர் வராவிடில் நம்மை ஐயையின் இருக்கையை யடையச் சொன்ஞரே. ஐயோ! யான் அப்போதே அறிந்துகொள்ளாமற் போனேனே! மற்றவரைக் காத்தற்பொருட்டு மன்னனிடம் தன்னுயிரைச் சரண்புகுத்தப் போயினுர். அந்தோ. அறிவிலி யான்! ஆணுய்ப் பிறந்திருந்தால் வேந்தன்பால் யானே சென்று அவருக்காக என்னை யடைக்கலம் கொள்ளச் சொல்லியிருப்பேனே!"

"இல்லையம்மா! இல்லை! அந்திக்காலத்திற்குள் அவரிங்கு வராவிட்டால் நாமவரை எவ்வயின் காணலா மென்றுதான் சொன்னுர். வேறுபொருளில் அவர் பேசவில்லை. நீ வீணில் கவலைப்படாதே. சிலருக்குத் தானே வரும் துன்பம். நீயோ அதனை வருந்தி யழைக்கின்ருயே! அவருக்கு ஒருதீங்கும் நோரது நீ மால்கொண்ட மால்வண்ணரையோ துயரென்றும் தீண்டாது. எனது கனு எந்நாள் வீண் போயிற்று? அதன்படி உனக்கும் மால்வண்ணருக்கும் ஒரு குறையும் இல்லையே. ஆகையால் நீ வீணில் மால்கொள்ளாதே. வேற்றாரனுகிய விஜயனைப்பற்றி யான் முன்னறிந்து சொன்னது பொய்த்ததோ? இன்று நாமடையும் மயக்கத்தை முன்னரே மொழிந்தே னல்லனே? தீங்குகளனைத்தும் தவறுதடைய,நான் சொன்ன நன்மைகள் மட்டும் அணுகா தகலுமோ? கொண்ட கவலையை விண்டகற்று. இப் பாழான குகையே இத் துன்பத்திற்கெல்லாம் காரணம். பேய்பிடித்த இவ்விடத்தை விட்டகன்ருலே துன்பமொழியும். நான் ஒரு கதை சொல்கிறேன் கேள். என் யாழினிசை என்றும் நினக்குக் களிப்பு நல்குமன்ருே; இன்று கேள்" என ஆலாலன் கட்டுக்கதையொன்றைப் பாட்டா யமைத்துப் பாடலாயினுன்.

கவிக்:— காடதனிற் கட்டைவெட்டிக் களிப்புடனே
கவிபாடுங் கணவ ஞேர்நாள்
ஏடவிழ்தேன் மலர்நாடி யழிலுடனே
யெதிர்கொள்ளும் மனையா ளேக்கி 1

கண:--மானம்போய் மைத்துனனென் றெண்ணுதுன்
பின்னவனை மடித்து வீழ்த்திக்
கானகத்திற் கருந்தனம்போய்க் காந்துறைதல்
காதலியுன் கண்ணு லென்ருன். 2

மனை:—கலையுணர்ந்துங் கவலுதியோ கடும்போரிற்
கைகலந்தே கொற்றம் பெற்ருய்
நிலையிலாவுன் னிதியமெலாம் நீங்கினுலென்
நின்னன்பு நிறையப் பெற்றேன். 3

கண:—இன்குரலோ டிசைபாடி இணங்குநல்யாழ்
தைவருமுன் தளிர்க்கை நோவப்
புன்ருெழிலிற் புக்காய்நீ புல்வாய்த்தோற்
பிளந்தெய்த்த லூழே யூழே. 4



மனை:—பிளந்தாலென் பரிவுடனே பிரிவிலனு
யென்கணவன் பின்னே நிற்பின்
அளந்தறியாச் செல்வத்தோ டடலுடைய
வுடன்பிறப்பு மவரே யவரே. 5

கவிக்:—இங்கிவ்வா றிருவருமே யிரக்கமுடன்
சின்மொழிக ளியம்பித் தேற
அங்குற்ற தவ்வனத்தி னருளில்லாக்
கொடுமைகூ ரணங்கு தானே. 6

தேய்:-மரத்திடையே முழங்குகின்ற வொலிகேட்டு
மானிடரா ரிங்கு வந்தார்
துரத்திடுவேன் றயிலுமென்றன் றுணைவியிவ
ளெழுந்திடுமு னென்று கூறி. 7

அருகிருந்த காவலனை யழைத்துநீபோய்
அறிவிலாவிம் மனிதர் தாமே
வெருவியோட வெம்மொழிகள்வெகுண்டுபேசி
வேறின்றேற் சபித்தி டென்ருன். 8

கவிக்:—வனதெய்வம் வகுத்துரைத்த வேவலேற்று
வருகின்ற பேயைக் கண்டு
தனதாற்றல் தோன்றிடவவ் வலகைதனைத்
தடுத்தெதிரு மவனைக் கண்டு. 9

பேய்:—கறைதங்குங் கையுடையாய் பேராற்றல்
பெற்றிடினுங் கொலைநீ செய்தல் [முன்
முறையிலோயை முனிந்திந்நாள் முடிப்பதன்
முழையொன்றில் முடுகிப் போவாய். 10

மனை:-என்னலுமே யெழிலுடையா ளெதிர்ந்துவந்
தென்கணவன் கறைக்கை பெறினும்
பன்னியென்கை பழுதிலது புனிதநீரால்
புடைப்பேனுன் வழிச்செல் லென்ருள். 11

பேய்:—முன்னுளில் மொய்ம்புடைய மன்னன்யான்
முதுபேய்கள் முந்தும் வேளை
யின்னுத விகலுற்றே யிவ்வுருவ
மியைந்துள்ளே னிதனை நீக்க 12

நடுக்கமிலா நெஞ்சத்தா ணவையறுசீர்
நடத்தையினு ளொருத்தி நேர்ந்து
இடுக்கணொழித் தின்பூட்டு மோங்கார
மந்திரத்தை முகத்தி லெழுதின். 13

பண்புடனே பழையவுருப் பெற்றிடுவேன்
பைந்தொடியை யெங்குங் காணேன்
எண்டவத்தின் மிக்காளை ஏதெதற்கு
மஞ்சாளைக் காண்ப தெந்நாள். 14

கவிக்:—அழுங்குகின்ற பேயணுக வணங்களுே
மோங்கார மந்திரந் தன்னை
மழுங்கியபேய் முகத்தெழுத மருளுமாறு
மாறிற்றே மந்தி யுருவாய். 15

மயங்காத மனையாளும் மறுமுறையும்
மந்திரத்தை யெழுத வுலகி
லியங்காத வுருவமவ ளெதிர்நிற்க
இருண்டதேயிம் மண்ணும் விண்ணும். 16

மனை:—கற்பதனிற் பிழைத்திலேன் கலங்கேனிக்
காரிருள்கண் டென்று மீண்டும்
முற்பவத்தின் வினைநீங்க மும்முறையும்
வரைதலுமே முன்னின்ரு னிறந்ததம்பி.

கவிக்:—காடதனிற் கட்டைவெட்டிக் களிப்புடனே
கவிபாடுங் கணவ னந்நாள்
ஏடவிழ்தேன் மலர்சூடி யெதிர்வாளை
எடுத்தணைத்தா ரெய்தி னனே. 18

என ஆலாலன், சுதஞ்சனை தன் துயர்மறந்து சிறிது தேறும்வண்ணம் தாழிசை சில யாழினேடிழையப் பாடினுன்.

புளிஞர் - வேடர். கருணி - குகை. தாளம் புரள்தரு கயல் - முத்துப்போல் நீர் உதிர்க்கும் கண்கள். தறுகண் ஆண்மை - ஒருவருக்கும் அஞ்சாத வீரம். கொண்டல் - மேகம். அம்பரம் - ஆகாயம், வாரணம் - கோழி. கடுக்கும்- ஒக்கும். மொய்ம்பு - வலிமை. மால் - காதல்; மயக்கம், அணங்கு-காட்டுத் தெய்வம். அலகை - பேய். அழுங்குதல். வருந்துதல். கறைக்கைபெறினும் - தன் மைத்துனனைக் கொன்ற இரத்தக்கறையுடைய கையையுடையவ னுயினும்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்.

### 1. மந்திரப் படலம்.

[275 வது பக்கத் தொடர்ச்சி]

முதுமை யின்றேற் கதையு மில்லை.

முதலறந் தலைபெறு மரசியன் முறையினிற் கதிபதி தயரத னவைதனி லங்கமாய் மதிமிகு வமைச்சரு மாதவ முனிவரும் வதிதர வளங்கெழு வாய்மையீ தாகுமே. அரசனு மமைச்சரு மொருமுகமுட னங்கு ஆற்றல் நல்லறமல்ல திலாமையால்,

மன்னவ னவர்முக மரபி னேக்கினன்
உன்னிய தருமம்போ லுறுதி யென்றுள
தென்னுணர் வனையநீ ரினிது கேண்மெனு

[மன்னவன் அவர்களது முகங்களை முறையாகப்பார்த்து "நினைத்துச் செய்கின்ற தருமம்போல் நன்மை தாவல்லது வேறு எது இருக்கின்றது. இவ்வுண்மையில் என்னுடைய உணர்வையேபோல் எனக்கு இணங்கியிருக்கின்ற மந்திரிமார்களே, யா னுரைக்கவருவதை நன்ருகக் கேளுங்கள்] என்று தான் கருதிய கருமத்தை விளம்புவானுகி,

வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னெருமுறை திறம்ப லின்றியே
வையம்யா னுண்டவாண் டுங்கண் மாட்சியா
லையமி லறபதி னுயி ரம்மரோ

[சூரியனைத் தமக்கு முதலாகவுடைய குலத்தில் வந்த வேந்தர் மேன்மைபொருந்திய குணவொழுக்கங்களை யுடையவர். அவர்களது ஒழுக்கத்தினின்று எள்ளளவும்பிறழாமல் யான் இப்பூமியை ஆண்ட வருடங்கள் சிறிதும் சந்தேகமில்லாமல் அறுபதினாயிரம் ஆகும்.]

எனத் துவக்குகின்றான்.வயதால் முதிர்ந்தெய்த்திருப்பதால் தான் இனி வையகந் தாங்குதற்கு உரியனல்லன் என்னுங் காரணங் கூறித் தன்னரு மைந்தன் இராமனை யரியணை யமர்த்துதற்கு அவ் வவைக்கண் இருந்தோரை ஒருப்படுத்த வேண்டுமென்பது தயரதன் நோக்கம். இதுகாறுந் தன் அமைச்சரோடொன்று முசாவினனென உரைத்திலர் கம்பர். "யாது நுங் கருத்து" எனத் தயரதன் அவர் மனமறிந்து ஒழுக முயன்ற இம்முறையே அவனரசில் முதலும் இறுதியுமாகும். சரித்திர வாராய்ச்சி வல்லுநர், அக்காலத்திலும் அமைச்சிற் கடங்கியே அரசு நடந்ததெனச் சாற்றுதற்கு இதனையோர் பெருஞ்சான்றெனப் பாராட்டுவர். கம்பரோ அரசின் மேன்மைக் கிதனை ஆதாரமாய் வைத்திலர். பின், ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே யெனக் கைகேசிக் கெதிர் ஆடிப்பாவைபோல் தயரதன் ஆடுதற்குரிய தளர்ச்சியையே இங்குக் கவி முன்னறிவுறுத்துகின்றார். மூப்பில் தளர்ந்தனன் தயரதன் என்னற்கு,

மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமூ லத்தினிற் கழற வந்தென
மின்னருங் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்

என்னுமோர்செய்யுள் இப்படலத்தின்முதலாகச் சில ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றது. இதுமிகை; யாண்டு பலவாகியும் நரை திரை முதலிய யாவரும் எய்தா அந் நன்னாட்டின் இறைவனுக்கே ஓர் மயிர் கருமை மாறவேண்டா. மந்திரத்திலும் தந்திரத்திலும் இந்நாள்வரை கூட்டொருவரையும் கொள்ளாதிருந்த இம்மன்னவன் இன்று தன்செயலிற்கு அமைச்சர்தம் அநுமதி கேட்டதே போதும். செய்கையன்றிச் சொல்லுஞ் சோர்ந்தனன் என்ன, தாயுந்தவமும் சேயும் மருந்தும் அறிவுமாய்த்தானே மன்னுயிரோம்பிய இவன் மற்றெல்லா வேந்தரையும்போல் வையம் தான் ஆண்டதாகக் கழறலுற்றனன். உரைத்தவக் கணமே அச்சொல் அமையாதென ஓர்ந்தனன்போலும். ஓர்ந்து அப்பிழையைச் சிறிது தணிப்பான்போல் "இங்கு உங்கள் மாட்சியால்" என மந்திரிகளை உளப்படுத்திக் கொள்கின்றானேனும், இவ்வுரை தன் வாய் வந்ததேயென உறுத்திய உள்ளத்தால் ஏதோ பகரப் புகுந்து "ஐயமில் அறுபதினாயிரம்" எனமுடித்தனன். ஐயமில் என்பது பயனின்றி அடுத்து வந்தது. அறுபதினாயிரத்தை ஐயத்திற்குள்ளாக்கினாரார். எதுகை நோக்கி இவ்வாறு இல்லாத ஐயத்தைத் தீர்த்த பிழை கம்பரது அன்று; அதனைக் கழறிய தயரதன் பிழையேயாதல் வேண்டும்.

இழைத்த பிழை யுணர்ந்தவுட னதனைத் திருத்திவைக்க விரைவ தியற்கை. 'ஆண்டேன்' என்ற சொல்லில் அடங்கிய இழுக்கை அறவே அகற்ற நினைத்து,

கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினே
னென்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்

[தருமம் எனக்கு உதவி செய்ய, முன்னவர் முறையில் திறம்பாத பெருமை பெருகும்படி, கன்னியருக்கு ஏற்றதாகிய கற்பைப்போல் இப்பெரிய பூமியை யான் காத்து, நிலையுள்ள உயிர்களுக்கு உரிய நன்மைகளையே செய்து வாலாயினேன்— இனி, என் உயிரிற்கு உரிய நன்மைகளையும் செய்துகொள்ளக் கருதினேன்]

என்று செப்புகின்றான். ஆண்டதென்றதை மறைக்கப் புக்கவன் காவலுந் தன்செய லன்றென உரைத்துவிடுவதை, "கன்னியர்க் கமைவருங் கற்பின்" என்ற உவமையிற் காணலாம். கன்னியர் தம் கற்பினால் தம்மையே காத்துக்கொள்கிறதுபோல் இவ்வுலகினோரும் தம்முடைய தருமத்தால் தம்மையே காத்துக்கொண்டனராதலால் தான் காத்தற்பாலது யாதுமில்லையென இவன் துணிந்து செப்பியது சிறந்ததே. "யா னிவ்வுலகினைக் காத்தேனு மல்லேன்" என்னுங்கால், "ஆண்டேன்" என்றபொருள் அகன்று விடுகின்றது. ஆண்டானல்லன், காத்தானல்லன், மற்றுத் தன்னாலியன்ற உறுதியை மன்னுயிர்க்குச் செய்வதே கடனாயினன். இதுவரை, தக்கதே செய்தனன் தயரதன். எனினும் நாவழுக்குற்றொன்று இயம்பிவிட்டால் பின் அதனை மாற்றப்புகு முயற்சியில் மற்றொன்று இழைப்பது இயற்கையே. அவ்வியற்கைக் கிணங்கிய நிகழ்ச்சியை, "என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்" என்றதிற் காணலாம். தன்னுயிர்க் குறுவதொன்றுஞ் செய்யநினையாது மன்னுயிர்க் குறுவதுமாத்திரம் செய்துவருகின்ற வரையில் தயரதனுக்கு ஒருவித குறையும் நேர்ந்ததில்லை மன்னுயிரினின்று தன்னுயிரைத் தனியே பிரித்து இதற்கு ஓர் உறுதி தேடப்புகுவது இதுவே தயரதன் சரித்திரத்தில் முதன்முறை யாகும். "செயிரிலா வுலகினிற் சென்றுநின்று வாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பே" தான் ஆய பரிசினை முதுமையின் கொடுமையால்அயர்ந்து தன்னுயிரைத் தனித்த தன்மையில் எண்ணப்புகுந்த இந்நாளே அவனது இறுதிக்கு முதல்நாள் ஆகின்றது. இப் பிழையைத் தெய்வம் பொருக்கவில்லைபோலும்; கைகேசியாய் வந்து அவனதுயிரை வெகுவிரைவில் ஒறுத்துவிட்டது. உறுதி தேடியதாலன்றோ இவ்வுயிரை யவன் இரண்டொரு நாளில், கொண்டுபோய், "உய்யேன் நங்காய் உன்னபயம் என்னுயிர்" என்று கைகேசியின் காலில் தள்ள நேர்ந்தது.

இவ்வாறு தயரதன்சொற்சோர்வும் மனச்சோர்வும் விளைதற்குரிய வயதுஎய்தினன் என்பதைக் காட்ட வேண்டியது இந்நாடகம் நிகழ்வதற் கின்றியமையாததாகின்றது. இல்லையேல் கைகேசியின் சூழ்ச்சி யெல்லாஞ் செல்லாமலொழியும். தனக்குரிய தளர்ச்சியிலாத் திட்பமுடையவனாய்த் தயரதன் இன்று மிருப்பானேல், தான் இரங்கவிரங்க இளகாளாகி, "சாந்தாழ் வில்லாய் தந்தவரத்தைத் தவிர்கென்றல் உரந்தானல்லால் நல்லறமாமோ" எனக்கடிந்து "தாராயாகில் என்னுயிர் மாய்வேன்" என்று அக்கொடியவள் அச்சுறுத்தியபோது, "மாதே, வாழும் வாய்மையும் நெறிமுறை பயில்தற் குரியனவேயன்றி கொடுமைக் கென்றும் கையாளாகா. என் வாய்மையை நீ தீப்பயனுள் படுத்தப் பார்க்கின்றாய். ஆதலின் அதனை மறுத்தலே இன்று அறமாம் காண். உன்மனம்போல் மாய்க," என்று எதிருரைத்த வீரனாய்ப் பொலிந்தவனாவான். இதனால் அவன் வாய்மையேனும் மரபேனும் அறமேனும் யாதும் திறம்பியதென எவரும் இயம்பார். இன்னவாறு நிகழ்த்துதற்குறிய திண்மை இங்குத் தயரதன்பால் நிலைநிற்குமேல் அங்கு இராவணன் எஞ்சுவானாதலின் தன்னிலை தளர்வுறும் மூப்பினில் மன்னவன் முதிர்கின்ற காட்சியைக் கம்பர் சூழ்ந்து சொன்னார் இதற்கு நரையுந் திரையுந் தோன்ற வேண்டியதில்லை; வாயின் உரையும் அவ்வுரைக்குப் பின்னிருக்கும் பொருளுமே போதும்.




## பாரதி

தேசிய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணு | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' காரியாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

## ரூ. 500 இனம்! எப்படி?

விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,

தபாற்பெட்டி 99. சென்னை.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!! 60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

கே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

**கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை**

**நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.**

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

**கெ. எஸ். கோபாலய்யா,** கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

**ANCIENT JAFFNA**

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5—8—0. V. P. Charge Extra.**

***MANAGER:—***

***KALANILAYAM,***

***11, VELLALA STREET,***

**Purasawalkam, MADRAS.**




## வர்த்தமானம்

தேவகோட்டை

### ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண் பாடசாலை.

வேந்தன்பட்டி ஸ்ரீமான் வெ. சி. ப. மு மெய்யப்ப செட்டியார் அவர்கள் இப் பள்ளியைப் பாராட்டித் தந்த புகழுரை:—

'உலகத்தோடொட்ட வொழுகல் பல கற்றும் கல்லா ரறிவிலாதார்' என்றபடி, தற்கால கருமங்கள் படர்நெறி யுன்னி, நமது அன்பர் உயர் திருவாளர் வெ. அழ. அழகப்பசெட்டியாரவர்கள் நடாத்தி வரும் ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண்பாடசாலை நம் சிறுமிகளுக்குப் புரியும் பேருபகாரம் போற்றுதற்குரியதாகும் யான் இவ்வூருக்கு வருந்தோறும் இப் பாடசாலை செல்லாது திரும்புவது கிடையாது. ஏனெனில் இப்பாடசாலை ஆசிரியர் திரு முருகன் அவர்கள் மதுரையம்பதியில் என்னோடு வசித்துவந்தவரும், எமதூர்வாசியும் எமது ஆப்தநண்பரும் ஆவார். தேவகோட்டை வரும்போதெல்லாம் இக்கல்விச்சாலைக்குச் சென்று மாணவிகளைச் சிறிது நேரமாவது பரீட்சிக்காமற் போவதில்லை. ஒவ்வொரு முறையிலும் மாணவிகளின் பயிற்சியைக் கவனிக்குங்கால் வளர்பிறைச் சந்திரன்போற், பிரகாசித்துக்கொண்டே வருகின்றது. இப்பாடசாலையின் நேரியவழியும், பாடங்கள் நடததி வரும் முறையும் சிறப்புடையன. திரு முருகன் அவர்கள் இப்பாடசாலைக்கு ஆற்றிவரும் தொண்டைப் போற்றுதார் யார்தாமுளர். மாணவிகட்கு நூல்நூற்றல்முதல் திருக்குறள்முதலிய நீதிநூல்பயிற்சி வரை தரலாவது யாவருள்ளத்தையும் கவருமென்பதில் சந்தேகமில்லை. இம்மாணவிகட்குத் தேகப்பயிற்சி இன்றியமையாததாகையால அதையும் முருகன் அவர்கள் ஊன்றிக் கவனித்து நடாத்தி மேல்நிலைமை அடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பாடசாலையின் சிறப்பு எமதுள்ளத்தில் குடிப்புகுந்தமையான் எமது புதல்வி உமையபார்வதியை இப்பாடசாலையில் நாளது மாசித்திங்கள் நான்காம்நாள்முதல் கல்விப் பயிற்சியின்பொருட்டுச் சேர்த்துள்ளேன். எல்லாம் வல்ல இறைவனருளால் இக்குழந்தையும் இன்னும் இப்பாடசாலை மாணவிகளும் உயரிய படிப்பும் நீண்ட ஆயுளும் பெறவேண்டுமெனவும், இச் சுவர்ணமூர்த்தி பெண்பாடசாலை நீடூழி வாழவேண்டுமெனவும் இதை நடாத்திவரும் வெ அழ. அழகப்பசெட்டியாரவர்களும், ராட்டினப்புலவரும் ஆசிரியருமான திரு முருகன் அவர்களும் நீண்ட ஆயுளையும் அரோக திடகாத்திரத்தையும் பெறவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

குறிப்பு:—சென்றவாண்டு செப்டம்பர் மாதம் தேவகோட்டைபோக நேர்ந்தகாலத்தில், ஸ்ரீமான் வெ. அழ அழகப்பசெட்டியார் அவர்களால், ஸ்ரீமுருகனார் தலைமையில் நடத்தப்பட்டுவரும், ஸ்ரீசுவர்ணமூர்த்திபெண் பாடசாலையைப் பார்வையிட்டேன். சில தினங்களும் அங்கே தங்கியிருந்தேன். பரமன்பால் பிள்ளைகளுக்குப் பக்தி பிறக்குமாறு இப் பள்ளியின்கண் வந்தடைந்த சிறுமிகளைப் பயிற்றுவிக்கும் தூயநோக்கம் தவிர வேறெதுவும் இல்லாது முயல்கின்ற முருகனரது முயற்சி என்னைக் கவர்ந்தது காலம்என்றும் தேசம்என்றும் வாய்வந்தன சொல்லிக்கொண்டு கல்வியைத் தையல் மூலமும், ஊசி மூலம், குழந்தைகள் தூக்குவதற்கும் இயலாதபடி அவர்கை நிறைக்கும் புத்தகக் குப்பை மூலமும் திருத்துவார் சினத்திற்கும் சிரிப்பிற்கும் அஞ்சாது நிகண்டு, நாலடியார், குறள், நன்னூல், நளவெண்பா, முதலிய நூல்கள் கொண்டு கடவுள் கல்வியை நல்கிவரும் முருகனார் வீரம் பாராட்டற்குரியது. ஈண்டுப் பிரசுரித்துள்ள மதிப்புரை வரைந்தவர் தமது புதல்வியை வேந்தன்பட்டியிலிருந்து, தேவகோட்டைக்கு அழைத்துவந்து சுவர்ணமூர்த்தி பெண்பாடசாலையில் சேர்த்துளார் எனின் இப்பள்ளியின் பெருமை எத்துணைத்து என்பதை நாம் விளம்பாமலே அறிதல் இயலும். நீதிநூற் பயிற்சியும், அவைகளுடன் காவியப்பயிற்சியும் தவிர சிறுவர்களுக்கு வேண்டுவது பிறிதொன்றிலதென்றும் இப்பயிற்சி முறையின் தரப்படுமாயின், பிள்ளைகள் பிறகு உய்ந்திடுவர் என்றும், கலாநிலயம் வகுத்துவரும் வாய்மைக் கியைய இப் பள்ளியை நிறுவி உலகிற்கு உண்மையான உதவிதரும் ஸ்ரீ அழகப்ப செட்டியாரும், மனச்சான்றிற்கு மாறுபாடின்றித் தாம் கண்ட நெறியின்வழி பள்ளியை நடத்திவரும் முருகனாரும் முழுமுதற்கடவுளின் அருளிற்கும் நல்லோர் பாராட்டலுக்கும் பெரிதும் பாத்திரமாகின்றனர். சுவர்ணமூர்த்தி பெண்பாடசாலையின் நன்னோக்கம் நிறைவுற்றுத் தழைக்குமாறு இறைவனை நான் நாளும் இறைஞ்சுகின்றேன். [ K. R. ]

***

திருவள்ளுவர் வாசகசாலை:—வேந்தன்பட்டி திருவள்ளுவர் வாசக சாலையின் 5. 6. 7. 8-வது ஆண்டுகளின் அறிக்கைச் சுருக்கம் வருமாறு:—

பாஷாஞானமின்றி உய்வதற்கு வேண்டிய சமயஞானம் கைவரப்பெறுதல் இயலாத தொன்றேயாம். இத் தென்னாட்டிலுள்ள நம்மனோர்க்குத் தாய்மொழியும் தனிமொழியுமாகிய தமிழ்மொழி முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானால் தந்தருளப்பெற்றது. இம் மேன்மைபொருந்திய நம் தாய்மொழியை வளரச் செய்வதோடு நமது சமயத்தையும் வளரச்செய்வது நமதுமுதற்கடமையாகும். இவற்றின் இன்றியமையாமை கருதியே இவ்வாசகசாலை துன்மதிவருடம் முதல் நடைபெற்றுவருகின்றது. இவ்வாசகசாலைக்கு உலகவிஷயமும் சமயஞானமும் இலக்கிய இலக்கண உணர்ச்சியும் வளர்ச்சியுறும்படியான பல பத்திரிகைகள் வருகின்றன. புத்தகசாலை ஒன்றும் உளது. இப் புத்தகசாலையில் இன்னும் அரியபெரிய நூல்கள் அநேகம் தொகுத்து வைக்கவேண்டுமென்றும் இதன் சார்பாகச்சிறந்த தமிழ்க்கலாசாலை ஒன்றை நிறுவவேண்டுமென்றும் அன்பர்கள் பலர் விரும்புகின்றனர். இதன் சார்பில் சைவசமயாசாரியார்களின் திருநாளும், திருவள்ளுவநாயனார் திருநாளும், சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. அக்காலங்களிலும் விசாகத் திருவிழா முதலிய விசேட காலங்களிலும் பல கூட்டங்கள் நடைபெற்றன. அக் கூட்டங்களில் பெரியார் பலர் தலைமை வகித்தும் உபந்நியசித்தும் எல்லோரையும் மகிழச் செய்தனர். இவ் வாசகசாலை பின்வரும் நோக்கமுடையது. திருவள்ளுவநாயனார் திருநாளன்றும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள். ஆகிய சைவசமயாசாரியார்திருநாளன்றும் குருபூசையைச் சிறப்பாகச் செய்தல்; சந்தர்ப்பம் நேர்ந்துழி அன்பர் பலரை உபந்நியசிக்கச் செய்தல்; "திருவள்ளுவர் புத்தகசாலை" யில் பல நீதிநூல்களைத் தொகுத்துவைத்து மக்களுக்கறிவை வளர்த்தல்; சமயம் சாத்திரம் இவற்றின்உண்மைகளைத் துண்டுப் பிரசுரமூலம் மக்களுக்குபோதித்தல்.

189099

KALANILAYAM. REG. NO. M. 2324.


# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல விஷ்யசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

**:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)